
உயிரின் உயிரே!
ராஜேஷ்குமார்

# 1

பாலகுரு நினைவு மனநல மருத்துவமனை

ராத்திரி நேரம் 7.15.

டாக்டர் வேணுகோபாலன் மணிக்கட்டிலிருந்த ஸீக்கோவைப் பார்த்துக் கொண்டே எழுந்தார். சராசரி உயரம். மாநிறம். தலைக் கேசத்தில் ஆங்காங்கே ஸ்பஷ்டமாய் நரை விழத் தொடங்கியிருந்தது. நெற்றிக்கு மேலே பளபளப்பாய் வழுக்கை - ஆரம்பமாகியிருந்தது.

அவர் இருக்கையை விட்டு எழுந்த அதே வினாடி - கேரள வாசம் வீசும் நர்ஸ் அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்துச் சொன்னாள்.

''டாக்டர்! நீங்க ரவுண்ட்ஸ் போற நேரம்.''

''பேஷண்ட்ஸ் சார்ட் எடுத்துகிட்டியா?''

''எடுத்துக்கிறேன் டார்க்டர்.''

அந்த நர்ஸ் கப்போர்டிலிருந்து சில க்ளிப் பேடுகளை எடுத்து மார்போடணைத்துக் கொண்டாள். க்ளிப்பின் வாய் சார்ட்களைக் கவ்வியிருந்தது. டாக்டரின் பின்னால் நடந்தாள்.

''நேத்தைக்கு அட்மிட் ஆன அந்த பேஷண்ட் எப்படி இருக்கார்?''

''ரொம்ப விநோதம் டாக்டர். ராத்திரி ஏதாவது கனவுகாண வேண்டியது. அந்த கனவுப்படியே எல்லாம் நடக்கணும்னு பகல்ல ரகளை. சில சமயம் சிரிப்பா கூட இருக்கு.''

''சிரிப்பு வரக்கூடாது ரீட்டா. இது சிரிக்கக் கூடிய விஷயமும் இல்லை.



சொல்லிக் கொண்டே அந்த அறைக்குள் நுழைந்தார் டாக்டர். அவர் நுழைந்ததும் கட்டிலில் உட்கார்ந்திருந்த அந்த பேஷண்ட் விருட்டென்று எழுந்து நின்றான்.

''டாக்டர்... உங்களுக்காகத்தான் இத்தனை நேரம் காத்திட்டிருந்தேன்...''

''என்ன விஷயம்?'' டாக்டர் புன்னகையோடு அவனருகே சென்று தோளைத் தட்டினார்.

''இங்கே இருக்கிற எல்லாருமே ரொம்ப மோசம்.''

''ஏன்?''

''என்னை போட்டிங் போகக் கூடாதுன்னு சொல்றாங்க!''

''போட்டிங்கா? திடீர்னு என்ன போட்டிங் மேல ஆசை?''

''நேத்து ராத்திரி ஒரு கனவு.''

''போட்டிங் போற மாதிரியா?''

''ஆமா. எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு டாக்டர். நான் போட்ல போகணும்...''

''இப்ப இன்ஜெக்ஷன் போட்டுக்க. சாயந்தரம் லேக்குக்குக் கூட்டிட்டுப் போறேன்.''

''அங்கே தண்ணிதானே இருக்கும்?''

''ஆமா, தண்ணிலதானே போட்டிங் போக முடியும்?''

''படகு ரோட்ல போகாதா?''

''ரோட்ல எப்படி போட் போகும்?''

''ராத்திரி கனவுல போச்சே...!''

''கனவுல என்ன வேணுமின்னாலும் வரும்... அது மாதிரியே நடக்கணும்னு நினைக்கிறது ரொம்பவும் தப்பு... உனக்கு போட்லதானே போகணும்...? சாயந்தரம் கண்டிப்பா கூட்டிட்டுப் போறேன்.''

''நான் லேக்குக்கெல்லாம் வர

மாட்டேன்.''

''பின்னே?''

''ரோட்டுக்குத்தான் கூட்டிட்டுப் போகணும்.''

''ஓ.கே. சாயந்தரம் போகலாம்.''

நர்ஸ் பஞ்சைத் தேய்க்கத் துவங்க -

''நிஜமாத்தானே?''

''நிஜமா!''

நர்ஸ் இன்ஜெக்ஷன் போட்டு முடித்ததும், அவன் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு நடக்க ஆரம்பித்தார், வேணுகோபாலன்.

நர்ஸ் தொடர்ந்தாள்:

''டாக்டர்...''

''என்ன... ரீட்டா?''

''அந்த பேஷண்ட்டோட நிலைமையைப் பார்த்தா எனக்கு ரொம்பவும் பாவமா இருக்கு.''

''இப்பத்தானே ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சிருக்கோம். இனிமே போகப் போகச் சரியாயிடும்...''

''இந்த விசித்திரமான கனவுகளுக்கு என்ன காரணம் டாக்டர்?''

''அவன் மனசுக்குள்ளே அதிகப்படியான ஆசைகள். உண்மையைச் சொல்லப் போனால் அது கனவுகளே கிடையாது. அவனுடைய நினைப்புகள்தான்.'' சொன்ன டாக்டர் பக்கத்து வார்டுக்குள் நுழைந்து கொண்டே கேட்டார்:

''ரீட்டா, வாட் எபவுட் ஹரி? நேத்து ஏதோ ப்ராப்ளம்ன்னு ரிப்போர்ட் வர்ல?''

''அந்த ஹரி... படிக்க புஸ்தகம் கொடுங்கன்னு வார்டனைக் கேட்டிருக்கான். வார்டன் புஸ்தகம் எடுத்துக் கொடுத்திருக்கார். அதுதான் தப்பா போச்சு...''

''ஏன்?''



''அந்த புக்ல ஒரு நடிகை காபரே டான்ஸ் பண்ணுகிற மாதிரி ஸ்டில்...''

''சரி''

''கேக்கவா வேணும். ஏற்கெனவே அவனுக்குக் காபரே கேர்ள்ன்னா பிடிக்காது. புத்தகத்தை நார் நாரா கிழிச்செறிஞ்சிட்டு - ருத்ர தாண்டவமே ஆடிட்டான்.''

''புத்தகத்தைப் பார்க்காம ஹரி கிட்டே கொடுத்தது வார்டனோட தப்புத்தான்.''

பேசிக் கொண்டே - அந்த ஹரியின் அறைக்குள் நுழைந்தார்கள்.

ஜன்னலோரமாய்ச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கால்களிரண்டையும் மேஜை மேலே பெருக்கல் குறி மாதிரி போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஹரி. இருபத்தாறு வயது. சதைப் பிடிப்பான தாடை - தாடி ஒழுங்கில்லாமல் தெரிந்தது.

டாக்டரும் நர்ஸும் பக்கத்தில் - வருகிறவரை சுற்றுப்புறப் பிரக்ஞையே இல்லாமல் உட்கார்ந்திருந்த அவன், அந்த வினாடி இரண்டு பேரின் வருகையாலும் பாதிக்கப்பட்டு மெல்லத் திரும்பினான். டாக்டரைப் பார்த்ததும் சட்டென மேஜையை விட்டுக் காலை இறக்கி எழுந்தான்.

''ஹலோ டாக்டர்!''

''எப்படி இருக்கீங்க?''

''நீங்கதான் சொல்லணும்...''

''யு ஆர் கொய்ட் ஓகே. இன்னும் கொஞ்ச நாள் ட்ரீட்மெண்ட் எடுத்தா போதும்...''

''அதுவரைக்கும் நான் இங்கேதான் இருக்கணுமா டாக்டர்?''

''எஸ்.''

''இந்தச் சூழ்நிலை எனக்குப் பிடிக்கலை. ஜெயில் கைதி மாதிரி ஃபீல் பண்றேன். வெளியே சுதந்திரமா சுத்தணும்ன்னு

ஆசையா இருக்கு.''

''இன்னும் கொஞ்ச நாளைக்கு நீங்க வெளியே எங்கேயும் போகாம இருக்கறது உங்களுக்குத்தான் நல்லது. உங்க மனசுக்குப் பிடிக்காத சமாச்சாரங்கள் கண்ணுல பட்டா உங்களால தாங்கிக்க முடியாது.''

பேசிக் கொண்டே ஸ்டெத்தின் உதவியோடு அவன் இருதயத் துடிப்பைப் பார்க்க ஆரம்பித்தார் வேணுகோபாலன். அமைதியாய் நின்றிருந்த அவன் பார்வை டாக்டரின் கழுத்துப் பகுதிக்குப் போனபோது இருதயத் துடிப்பு தடதடவென்று எகிற ஆரம்பித்தது.

மூச்சில் உஷ்ணமும், கோபமும் கலக்க ஆரம்பித்தது.

''டா...க்...டர்...''

கத்தியபடியே வேணுகோபாலின் கழுத்தில் கையைப் பதித்தான்.

''ஹரி... வாட் ஹேப்பண்ட்...?''

''எதுக்காக உங்க... கழுத்துல இந்த செயின்? இதே செயினை இதே டாலரோட ஒரு காபரேக்காரி கழுத்துல நான் பார்த்திருக்கேன்... உங்களுக்கெதுக்கு இதெல்லாம்?''

பற்களை நறநறத்து டாக்டரின் கழுத்தில் கையை இறுக்கினான். நர்ஸ் வீறிட்டு அலற, டாக்டரின் விழிகள் பிதுங்க ஆரம்பித்தன.

## 2

அந்த ஹோட்டலின் காபரே ஹாலில் பெரிய பெரிய லஸ்தர் விளக்குகளின் வெளிச்சச் சிதறலுக்குக் கீழே - டான்ஸ் ஆடி முடித்து - எல்லா மேஜைகளின் கைத்தட்டலை வாங்கிக் கொண்டு பக்கக் கதவில் வெளியேறினாள் தீபிகா.



குறுகலான வராந்தாவில் ரூமை நோக்கிப் போனாள். ஒரு மணி நேரம் தொடர்ந்து ஆடியதில் வியர்த்துப் போயிருந்தது. லூஸாகப் பின்னப்பட்ட கூந்தல் அவள் முதுகைத் தட்டித் தட்டிக் கொடுத்து - முகத்தில் ஒரு க்ளாமர் நடிகைக்கு இருக்க வேண்டிய களை உட்கார்ந்திருந்தது.

''ஹாய் தீபிகா.''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்த தீபிகா - பின்னால் வந்து கொண்டிருந்த அவனைப் பார்த்ததும் - கண்டு கொள்ளாமல் நடக்க ஆரம்பித்தாள்.

''ஒரு நிமிஷம்.''

நிற்காமல் நடந்தாள்.

அவன் வேக வேகமாக வராந்தாவில் நடந்து வந்து வழியை மறித்தான்.

''கூப்பிடறேன்... நீ நிக்காம போய்ட்டே இருக்கியே...?'' தீபிகா கோபமாய் அவனைப் பார்த்தாள்.

''தினசரி உன்னோட இதே தொல்லையா போச்சு...!''

''நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னமும் பதிலே சொல்லலை.''

''நீ நினைக்கிற மாதிரி பொண்ணில்லே நான்.''

''என்னை நம்பச் சொல்றியா? உம் மனசு எனக்குப் புரியுது. நீ எதிர்ப்பார்க்கிற தொகையை என்னால தர முடியுமான்னு யோசிக்கிற! அப்படித்தானே? கவலைப் படாதே. நீ கேக்கறதைப் போல ரெண்டு மடங்கா என்னால வாரி இறைக்க முடியும்.''

''அகாடமி ஆடிட்டோரியத்தில் பரத

நாட்டியம் ஆடி முடிச்சுட்டுப் போற டான்ஸர் கிட்டே போய் இதே மாதிரி ரேட் கேப்பியா?''

''பரதம் ஆடுற டான்ஸருக்கும், காபரே ஆடுற டான்ஸருக்கும் வித்தியாசம் இல்லையா என்ன?''

''என்ன வித்தியாசம்?''

''அது குடும்பப் பொண்ணுங்க பண்ற டான்ஸ்... இது... அப்படியில்லை.''

''எல்லா டான்ஸ்மே ஒண்ணுதான். டான்ஸை டான்ஸா மட்டும் மதிக்கிற பட்சத்துல. இது உனக்குக் கடைசி வார்னிங், நாளைக்கும் இதே மாதிரி நீ நடந்துக்கிட்டா சொல்ல வேண்டியவங்க கிட்டே சொல்லி, செய்ய வேண்டியதைச் செஞ்சிடுவேன்.''

தீபிகா கோபமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

''என்ன ப்ராப்ளம்?''

கேட்டபடியே அந்த இளைஞன் பக்கத்து அறையினின்றும் வெளிப்பட்டான். ஹோட்டலில் மேனேஜராகப் பணிபுரியும் அந்த சங்கீத் வெள்ளை நிற ஸ்பன் சர்ட்டிலும், காபி நிற ஜீன்ஸ் பேன்ட்டிலும் எடுப்பாய்த் தெரிந்தான்.

அந்த இளைஞன் சங்கீத்தை ஏறிட்டு விட்டுக் கேட்டான்:

''இவர்தான் நீ சொல்ல வேண்டியவங்களா?''

கேட்டுவிட்டு சங்கீத்திடம் திரும்பினான்.

''நீங்க இந்த ஹோட்டல் மேனேஜர் தானே? உங்க கஸ்டடியிலதான் தீபிகா இருக்காளா?''

''மிஸ்டர்! உங்களுக்கு என்ன வேணும்?''

''தீபிகா வேணும்.''



''இவ நீங்க நினைக்கிற மாதிரிப் பெண்ணில்லை.''

''என்னது... தீபிகா பேசின டயலாக்கையே நீங்களும் பேசறீங்க! உங்களுக்கும் எம் மேல நம்பிக்கையில்லையா? ஏமாத்தமாட்டேன். பேசின ரேட்டைத் தந்திடுவேன். கமிஷன் மாதிரி எதையாவது எதிர்பார்க்கறீங்களா? அதையும் தரத்தயார்.''

சங்கீத்துக்கு உஷ்ணமேறியது. கை நரம்புகளில் விருட்டென ஆத்திரம் பாய -

''என்னடா நினைச்சிட்டிருக்கே... ஒரு தடவை சொன்னா கேக்க மாட்டியா?'' அவன் கன்னத்தை நோக்கி ஓங்கிய கையைத் தடுத்து இழுத்து அழுத்திப் பிடித்தாள் தீபிகா.

''வேண்டாம் சங்கீத். ஹோட்டல் கஸ்டமரைப் பகைச்சுக்க வேண்டாம்!'' சொல்லியபடியே ட்ரஸ்ஸிங் அறையை நோக்கிச் சங்கீத்தை இழுத்துக் கொண்டு போனாள். உள்ளே நுழைந்து கதவுத் தாழைப் பளக்கென்று போட்டுவிட்டு, சங்கீத்தை மூச்சு வாங்கிப் பார்த்தாள். அவன் கத்தினான்.

''கஸ்டமர்ன்னு மரியாதை கொடுத்தா... எக்கச் சக்கமா பேசிட்டு போறான் ராஸ்கல். அவனைச் செமத்தியா கவனிச்சிருக்கணும்.''

''அவனைச் சொல்லித் தப்பில்லை. உங்க மேலதான் தப்பு.''

''எம் மேலயா?''

''ஆமா. நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவரை இப்படி ஏதாவது பிரச்னை இருந்துட்டேதான் இருக்கும்.''

''சுத்திச் சுத்தி கடைசிலே அங்கே வந்திடு. எம் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா, தீபிகா? என்னிக்கிருந்தாலும் உன்னைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''அதை உடனே பண்ணினா என்னவாம்?''

''கொஞ்ச நாள் போகட்டும்.''

''என்னைச் சொல்லணும், சங்கீத். தாலி கழுத்துல விழுந்த பிறகுதான் எல்லாமேன்னு சொல்லியிருக்கணும். முழுசா உங்ககிட்டே இதோட நாலைஞ்சு தடவை என்னை இழந்திட்டேன். கல்யாணம் பண்ணிக்காமலே கிட்டத்தட்ட நாம ரெண்டு பேரும் கணவன், மனைவியாகத்தான் வாழறோம்.''

''தீபிகா...''

''ரெண்டாவது தடவை அபார்ஷனுக்குப் போனப்ப அந்த லேடி டாக்டர் என்ன கேட்டா தெரியுமா? பார்த்தா நல்ல பொண்ணு மாதிரி தெரியறே... டான்ஸ் பண்றதோட நிறுத்திக்கக் கூடாதா? உனக்கெதுக்கம்மா... இந்த தொழிலெல்லாம்ன்னு கேக்கறா.''

''ஸாரி தீபிகா. இனிமே நான் உன்னைத் தொடாமே இருக்க முயற்சி பண்றேன்.''

''அதுக்குச் சொல்லலை சங்கீத். என்னையும்," என் மனசையும் புரிஞ்சுகிட்ட ஒரு துணை கிடைச்சதேன்னு உங்ககூட பழகினப்போ சந்தோஷப்பட்டேன். அந்த சந்தோஷம் நிலைக்கணும்ன்னா கல்யாணம்ங்கற பாதுகாப்பு வட்டத்துக்குள்ளே நான் வந்தாகணும் சங்கீத்.''

தீபிகா ட்ரஸ் மாறினாள்.

காலியான ஹோட்டலை விட்டு வெளியே வந்தார்கள்.

பார்க்கிங்கில் நின்றிருந்த தன் ஸ்கூட்டரைப் பொறுக்கிக் கொண்டு வந்தான் சங்கீத். தீபிகா பில்லியனில் உட்கார -



சோடியம் விளக்கு வெளிச்சத்தில் குளிக்கிற சாலைகளிடையே ஸ்கூட்டர் ஓடியது. அந்த ராத்திரி நேரப் பத்தரை மணிக்கு ட்ராஃபிக் ஓய்ந்து போயிருந்தது.

சங்கீத் தீவிரமாய் யோசித்தபடியே ஸ்கூட்டரைக் கையாண்டான்.

''என்ன சங்கீத், ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க!'' ஹாஸ்டல் வாசல் வருகிறவரை அவனிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. ஹாஸ்டல் வந்ததும் - பில்லியனிலிருந்து குதித்த தீபிகா, முன்னால் வந்து அவன் முகத்தைத் தொட்டாள்.

''இன்னிக்கு நீங்க ஏதாவது உருப்படியான பதிலைச் சொல்லிட்டுத்தான் போகணும்.''

ஒரு ஆழமான பார்வைக்குப் பின் - சொன்னான்.

''ப்ராப்ளம் வீட்லதான் ஆரம்பமாயிருக்கு தீபிகா. நம்ம காதலைப் பத்தி சொன்னேன். 'காபரே டான்ஸரையா கல்யாணம் பண்ணிக்கப் போறே'ன்னு சத்தம் போடறாங்க.''

''என்கூடப் பழக ஆரம்பிச்சப்ப உங்க அப்பாவோட, தங்கச்சியோட ஞாபகம் வந்திருக்கலைன்னாலும் பரவாயில்லை. அட்லீஸ்ட் என்னைத் தொடறப்பவாவது வந்திருக்கணுமே சங்கீத். இப்ப என்ன பண்ணப் போறீங்க? அவங்க ரெண்டு பேரையும் எதிர்த்துத்தான் நாம் கல்யாணம் பண்ண வேண்டி இருக்குமா?''

''இல்லை தீபிகா. போன வாரம் திருவல்லிக்கேணியில் ஒரு பெண்ணைப் பார்க்கப் போயிருந்தோம். அடக்க ஒடுக்கமா இருந்த அந்தப் பெண்ணை அப்பாவுக்குப் பிடிச்சிருந்தது. தங்கச்சிக்கும் பிடிச்சிருந்தது.

நானும் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

# 3

நர்ஸ் ரீட்டாவின் கத்தலைத் தொடர்ந்து ஆர்டர்லிகள் நான்கு பேர் தடதடவென்று ஓடி வந்தார்கள். ஹரியின் பிடியில் எக்கசக்கமாய்ச் சிக்கியிருந்த டாக்டர் வேணுகோபாலன் ஏராளமாய் மூச்சுத்திணறி, கைகளிரண்டையும் உயர்த்தி வெட்ட வெளியில் நீச்சலடித்தார்.

ஓடிவந்த ஆர்டர்லிகள் மூர்க்கமாய் ஹரியை இழுத்து டாக்டரின் கழுத்தைச் சுற்றியிருந்த அவனுடைய கைகளை விலக்கி - டாக்டரிடமிருந்து பிரித்தார்கீள். பக்கத்து அறையில் தள்ளிக் கதவைச் சாத்தினார்கள்.

வேணுகோபாலன் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். பின்தொடர்ந்த ரீட்டா அமைதியாய் வர - சொன்னார்:

''இப்படி திடீர்ன்னு மனநிலை மாறித் தாக்குவான்னு கொஞ்சங்கூட எதிர்பார்க்கலை.''

''.....''

''எந்த நேரத்தில் ஹரிக்கு எது பிடிக்காதுன்னு யாருக்குமே தெரியறதில்லை டாக்டர்.''

''இந்த மனப்போக்கு ரொம்பவும் சீரியஸ். ட்ரீட்மெண்டை மாத்திப் பார்க்கணும். அவனோட சிந்தனைகளைத் திசை திருப்பணும்.''

''எப்படி டாக்டர்?''



''அவன் அறையில் வி.ஸி.பி. ஒண்ணைக் கொண்டு வந்த வைக்கணும்.''

''வச்சு?''

''ஒரு மாசத்துக்கு பரத நாட்டியம், ஒடிஸின்னு க்ளாஸிகல் டான்ஸை அவனுக்கு போரடிக்கறவரை போட்டுக் காண்பிக்கணும்.''

''காமிச்சா?''

''பொதுவா டான்ஸ் மேல அவனுக்கு நல்ல அபிப்பராயம் வரும். அப்புறம் மெல்ல மெல்ல காபரே டான்ஸ் மேல இருக்கற வெறியை மாத்தறது சுலபமா இருக்கும்.''

''டிஸ்கஷன் ரூம்ல இல்லஸ்ட்ரேஷனுக்காக வெச்சிருக்கிற வி.ஸி.பியை எடுத்து அவன் ரூம்ல வைக்க அரேஞ் பண்ணட்டுமா டாக்டர்?''

''பண்ணு''

அறைக்குத் திரும்பியதும் - கோட்டைக் கழற்றி நாற்காலியின் முதுகில் மாட்டினார். ஒரு அரை மணி நேரம் கேஸ் ஹிஸ்டரி பைல்களைப் பார்த்துவிட்டுக் கதவை நோக்கிக் குரல் கொடுத்தார்.

''ரீட்டா.''

''எஸ் டாக்டர்.''

''நான் புறப்படறேன்... நைட் ட்யூட்டி நர்ஸ் யாரு?''

''மேனகா.''

''இன்பர்மேஷன் நோட்ல எழுதி வச்சுட்டுப் போயிடு - 'அந்த ஹரியை எதுக்காவும் யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்'ன்னு...''

''சரி டாக்டர்.''

கார் சாவியோடு வெளியே வந்தார். இருட்டில் நின்றிருந்த காரினுள் நுழைந்து ஹெட்லைட்டை உயிர்ப்பித்து நகர்த்தினார்.

பதினைந்து நிமிஷப் பயணத்திற்குப் பின் - பங்களாவினுள் பிரவேசித்து - களைப்புத் தீர ஒரு குளியல் எடுத்து விட்டு டின்னரை முடித்துக் கொண்டு ஓய்வாக டி.வி. பார்க்க உட்கார்ந்த விநாடி -

டெலிபோன் தன் வாயைத் திறந்தது.

வேகமாய்ப் போய் ரிஸீவரை எடுத்தார்.

''டாக்டர் வேணுகோபாலன் ஹியர்...''

''டா...க்...டர்...நா...ன்... நர்ஸ் மேனகா பேசறேன்!'' மறுமுனையில் பதட்டத்தோடு நைட் ட்யூட்டி வந்த நர்ஸ் மேனகாவின் குரல்.

''என்ன மேனகா?''

''அந்த பேஷண்ட் ஹரி பாத்ரூம் வெண்டிலேட்டரை உடைச்சிட்டு, தப்பிச்சுட்டான் டாக்டர்.''

## 4

அந்தப் பார்க்கின் ஒதுக்குப்புறத்தில் ஒரு மரத்திற்குப் பின்னால் உட்கார்ந்திருந்தார்கள் தீபிகாவும் சங்கீத்தும். அன்றைய சூரியனுக்கு ரிடையர் நேரம் வந்திருக்க, பறவைகள் செண்ட் ஆஃப் கீதம் பாடிக் கொண்டிருந்தன. சொற்ப தூரத்திலிருந்த 'செயற்கைப் பாதைகளில் வயதானவர்கள் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்கள்.

''முடிவா என்ன சொல்றீங்க?'' தீபிகா கேட்டாள்.

''என்னை மறந்துடு தீபிகா.''

நேரடித் தாக்குதல் மாதிரி வந்து விழுந்த அவன் பதிலால் நொறுங்கிப் போனாள் தீபிகா. கண்களில் நீர்த் திரையும், நெஞ்சுக்குள் கோபத் தீயும் எழ அவனைப்



பார்த்தாள்.

''நீங்க யோசிச்சுத்தான் பேசுறீங்களா?''

''ப்ராக்டிகலா திங்க் பண்ணிப் பார்த்துத்தான் நான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். உன்னை மேரேஜ் பண்ணிக்கிறதால குடும்பத்துல நிறையச் சிக்கல் வரும் போலிருக்கு.''

''ஓகே! உங்க முடிவை நான் ஒத்துக்கறேன். நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலை. நீங்க என் கூடப் பழகினதைச் சுத்தமா மறந்துடறேன்...''

சங்கீத் நம்பாத கண்களோடு அவளைப் பார்த்தான்.

''தீபிகா?''

''அவசரப் படாதீங்க. ஆனா ஒரு கண்டிஷன்.''

''என்ன கண்டிஷன்?''

''நான் உங்களை மறக்கணும்ன்னா எனக்கு நீங்க தர வேண்டியது பணம் இல்லை. உங்ககிட்டே நாலைஞ்சு தடவை இழந்தேனே, அதைத் திருப்பித் தர முடியுமா?''

விருட்டென்று நிமிர்ந்தான்.

''சொல்லுங்க, அதை உங்களால திருப்பித் தர முடியும்ன்னா இந்த நிமிஷத்திலிருந்தே உங்களை மறந்துடத் தயார்...''

''எ... என்ன தீபிகா... பைத்தியக்காரத்தனமா பேசற... அதென்ன பண்டமா திருப்பித் தர்றதுக்கு?''

''அது எப்படி சாத்தியம் இல்லையோ, அதே போலத்தான் நான் உங்களை மறக்கறதும் சாத்தியமே இல்லை. 'என்னை மறந்துடு'ன்னு நீங்க என்கிட்டே சொன்னா, அது எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம் தெரியுமா?''

''எனக்கு வேற வழியில்லையே!''

''ஏன் இல்லை?''

''வீட்டைப் பகைச்சுக்க நான் தயாராக இல்லை.''

''என்கிட்டே ஆயிரத்தெட்டு தடவை ஐ லவ் யூ... ஐ லவ் யூனு சொல்றபோதெல்லாம் நீங்க வீட்டைப் பத்தி யோசிக்கலையா?''

''அப்ப எப்படியும் சம்மதிச்சுடுவாங்கன்னு நினைச்சேன்.''

''உங்க அப்பாகிட்டே நான் பேசிப் பார்க்கட்டுமா?''

''அதை விட வேற வினையே வேண்டாம். கழுத்தைப் பிடிச்சு விரட்டாத குறையா உன்னைத் துரத்திடுவார்...''

''என்னை மறந்துடுன்னு நீங்க உங்க வாயால கூசாம சொன்னீங்க பாருங்க. அதை விட மோசமா இனி யாரும் என்னை அவமானப் படுத்த முடியாது.''

''நீ சொல்றது எனக்குப் புரியுது தீபிகா. என் நிலைமையையும் நீ புரிஞ்சுக்க...''

தீபிகா ''உச்'' கொட்டினாள். ''புரிஞ்சுக்க என்னங்க இருக்கு...? உதறிட்டுப் போற ஆம்பளைங்க ஒரு ரகம். உங்களை மாதிரி பாலிஷா கை கழுவுற ஆம்பளைங்க இன்னொரு ரகம். மொத்தத்துல ரெண்டு ரகங்களாலும் பாதிக்கப்படறது என்னை மாதிரி அப்பாவிப் பொண்ணுங்கதான். நீங்க என்னைக் கை கழுவறதை ஏத்துக்க முடியாது...''

சங்கீத் முகம் மாறினான்.

''தீபிகா! நாம பழகின பழக்கத்துக்கு மதிப்புக் கொடுத்து இத்தனை நேரம் பொறுமையா பேசிட்டிருந்தேன். அதே பொறுமையை இனிமே எதிர்பார்க்காதே.



நான் சொல்றதைச் சொல்லிட்டேன். நீ என்னை மறந்தாலும் சரி, என்னையே வாழ்நாள் பூராவும் நினைச்சிட்டிருந்தாலும் சரி - நான் எடுத்த முடிவு எடுத்ததுதான்.''

தீபிகா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''நீங்க என்னை ஏமாத்திட்டு வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது...''

''உன்னால என்ன பண்ண முடியும்?''

''முதல்ல உங்க வீட்டுக்கு வந்து உங்க அப்பாகிட்டே பேசப் போறேன். அவரும் உங்களை மாதிரியே எடுத்தெறிஞ்சு பேசினா, நேரா திருவல்லிக்கேணியில் நீங்க பார்த்திருக்கிற பொண்ணு வீட்டுக்குப் போவேன். நம்ம ரெண்டு பேருக்கும் இடையே இருக்கற உறவை அவங்ககிட்டே சொல்லிடுவேன்.''

''மிரட்டிப் பார்க்கறியா?''

''மிரட்டலைங்க. என்னைத் தற்காத்துக்கறேன்.''

''நீ என்கிட்டே மோதினா, மோசமான விளைவுகள்தான் ஏற்படும்.''

''அதே விளைவுகள் உங்களுக்கும் ஏற்படும்...''

''தீபிகா...''

''உங்க சம்பந்தப்பட்ட எல்லார்கிட்டேயும் பேச்சுவார்த்தை நடத்தி என்னையே நீங்க கல்யாணம் பண்ணிக்கற மாதிரி ஒரு சூழ்நிலையை நான் உருவாக்கிக் கொடுத்தா நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்குவீங்களா?''

''தீபிகா! உனக்கு என்னைப் பத்தி தெரியாது... பொண்ணு வீட்டுக்குப் போய்ப் பேசற அதிகப் பிரசங்கித்தனமெல்லாம்

பண்ணினே, நடக்கறதே வேற.''

''உங்களைப் பத்தி முழுசா தெரிஞ்சுக்கற முயற்சில நான் இறங்கித்தான் பார்க்கிறேனே.''

''முடிவா என்னதான் சொல்றே?''

''உங்களைத் தவிர வேறொருத்தரை இந்த ஜென்மத்துல நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். அதே மாதிரி என்னைத் தவிர வேறொருத்தியை நீங்க கல்யாணம் பண்ணிக்க விடவும் மாட்டேன்.''

சொல்கிற தீபிகாவை -

கோபத்தில் குளிக்கிற பயங்கர விழிகளோடு பார்த்தான் சங்கீத்.

## 5

**கா**ரை வேகமாய் போர்டிகோவில் செருகி விட்டுப் படிகளில் தடதடத்தார் டாக்டர் வேணுகோபாலன். முன்புற ரிஸப்ஷன் ஹாலில் அவருக்காகக் காத்திருந்தார்கள் நர்ஸ் மேனகாவும் வார்டன் கார்த்திகேயனும்.

இரண்டு பேரின் முகங்களிலும் கணிசமான பதட்டம்.

''அவன் தப்பிச்சுப் போகிற வரைக்கும் நீங்க என்ன பண்ணிட்டிருந்தீங்க?''

''டாக்டர், ச்சலீர்ன்னு கண்ணாடி உடைஞ்ச சத்தம் கேட்டு நானும் நர்ஸும் ஓடிப்போய்ப் பார்த்தோம். நாங்க பார்க்கவே ஹரி கார்டனுக்குள்ளே நுழைந்து காம்பவுண்ட் சுவரை எட்டித் தாண்டி... தப்பிச்சட்டான்.''

டாக்டர் வேணுகோபாலன் உள்ளே போய் எட்டிப் பார்த்தார்.



அந்த பாத்ரூம் தரை பூராவும் கண்ணாடிச் சில்லுகள் சிதறிக் கிடந்தன. வெண்டிலேட்டர் கண்ணாடி, ஆள் நுழையும் அளவுக்கு உடைந்து கிடந்தது. வார்டன் கேட்டார்:

''போலீஸுக்குத் தகவல் தந்துடலாமா, டாக்டர்?''

''பெரியவருக்கு மொதல்ல நியூஸை கன்வே பண்ணுவோம். அவர் வந்து டெஸிஷன் எடுக்கட்டும்.''

சொல்லிக் கொண்டே வேணுகோபாலன் பாத்ரூமை விட்டு வெளியே வந்து பக்கத்து அறையில் இருந்த டெலிபோனை உபயோகித்தார்.

''ஹலோ... ராமகிருஷ்ணன் ஸார் இருக்காரா?''

''.....''

''ஸார்! இங்கே ஒரு அசம்பாவிதம்.''

''.....''

''நீங்க உடனே வரணும்...''

''.....''

''இல்லை ஸார். இன்னும் போலீஸுக்குத் தகவல் தரலை.''

''.....''

''சரி... ஸார்.''

ரிஸீவரைச் சாத்தினார்.

காத்திருந்த பதினைந்து நிமிஷங்களில் மாருதியில் வந்து இறங்கினார், ராமகிருஷ்ணன். சுத்தமான வேஷ்டி. அதே நிற ஜிப்பா. ஆரோக்கியமான நிறத்தில் தெரிந்தார். முகத்தில் கோபம். அவர்தான் அந்த ஹாஸ்பிடல் நிர்வாகி.

''இதான் நீங்க ஹாஸ்பிடலைப் பார்த்துக்கிற லட்சணமா?''

''நாங்க யாருமே எதிர்பார்க்கலை ஸார்...

இப்படி பாத்ரூம் வெண்டிலேட்டர் வழியா வெளியே ஓடிப் போவார்ன்னு...''

''அந்த பேஷண்ட் எப்படி... சாதுவான டைப்பா இல்லை... அரா கண்ட் டைப்பா...?''

''பார்க்கறதுக்கு சாதுவாத்தான் தெரிவான். திடீர் திடீர்ன்னு முரட்டுத்தனம் அவனுக்குள்ளே தலை தூக்கும். ஆபத்தானவன்தான்.

''பேஷண்ட் பேர் என்ன?''

''ஹரி.''

''போட்டோ இருக்கா?''

''இருக்கு ஸார். போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணினா சுலபமா அவனை மடக்கிடுவாங்க.''

''நோ, நோ. இந்த விஷயம் வெளியே வரக்கூடாது. ஹாஸ்பிடல் பேர் ஒரு தடவை கெட்டுதுன்னா அவ்வளவுதான். போலீஸுக்குத் தகவல் தர வேண்டாம்.''

''விஷயத்தைப் பத்திரிகைக்காரங்களுக்குத் தராமே போலீஸை ஹேண்டில் பண்ணச் சொல்லலாமே ஸார்.''

''நோ டாக்டர், எப்படியும் விஷயம் வெளியே வரலாம்.''

''அதர் சொல்யூஷன்?''

''நாமதான் ரகசியமா தேடணும்.''

''ரொம்ப கஷ்டம் ஸார்.''

''நாம நேரடியா தேடல்ல இறங்கணும்ன்னு சொல்லலை. டிடெக்டிவ் ஏஜென்ட்ல யாரையாவது அப்ரோச் பண்ணினா காரியத்தை முடிச்சுத் தருவாங்க.''

''அதை உடனே செய்யறது நல்லது ஸார்.''

''டாக்டர்! நீங்க அந்த பேஷண்ட் பத்தின டீடெய்ல்ஸை எடுத்துக்கிட்டு என் கூட



வாங்க.''

தலையசைத்தபடியே - வேணுகோபாலன் நர்ஸைப் பார்க்க - நர்ஸ் குறிப்பறிந்து பேஷண்ட்களின் பர்சனல் ஃபைல்கள் வைக்கப்பட்டிருந்த கப்போர்டை நோக்கிப் போனாள். ஹரியின் ஃபைலைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தாள்.

ராமகிருஷ்ணனும், வேணுகோபாலனும் காருக்குப் போனார்கள். வீதிகளில் காரை விரட்டினார் ராமகிருஷ்ணன். இருபது நிமிஷ கார் பயணத்தின் முடிவில் அந்த ஹவுஸிங் காம்ப்ளக்ஸின் முன்னால் காரை ஓய்வாக்கினார்.

லேஸர் டிடெக்டிவ் ஏஜென்ஸி.

இரண்டாவது மாடியில் என்று அம்புக் குறியோடு போர்டு இருந்தது.

மாடிப் படிகளில் உயர்ந்து, இரண்டாவது ஃப்ளோருக்குப் போன போது-

கவிதா முடியை ஒதுக்கி விட்டுக் கொண்டு வலுக்கட்டாயமாய் டிடெக்டிவ் ஏஜென்ஸியின் கதவைப் பூட்ட முயற்சித்துக் கொண்டிருக்க - நரேன் அவளைத் தடுத்துக் கொண்டிருந்தான்.

''சொன்னா கேளு கவிதா. இன்னிக்கு யாராவது பார்ட்டி வருவாங்கன்னு எம் மனசுக்குள்ளே பட்சி ரொம்ப நேரமா சொல்லிட்டிருக்கு.''

''அந்தப் பட்சியோட கழுத்தைத் திருகி எங்காவது எறிஞ்சுட்டு வாங்க நரேன். மணி பன்னிரண்டாகப் போகுது. அர்த்த ராத்திரியில ஆபீஸ் கதவைத் திறந்து வெச்சுகிட்டு பிசாசு மாதிரி உட்கார்ந்திருக்க நான் தயாரில்லை.''

''தலையை விரிச்சுப் போட்டிருக்கற உன்னைப் பார்த்தா பிசாசு மாதிரிதான் இருக்கு.''

''இப்படி யெல்லாம் கமெண்ட் பண்ணி னீங்கன்னா கால்கடுதாசி எழுதி நீட்டிட்டு நான் போய்க்கிட்டே இருப்பேன்...''

''அந்த நன்னாள் இன்னாளே வராதான்னுதான் காத்திட்டிருக்கேன்.''

''யூ... நரேன்... மாட்டேன்... நீங்க என்னதான் கிண்டல் பண்ணுங்க. அசைய மாட்டேன். உங்க கூடவே இருந்து கழுத்தறுப்பேன்.''

''மோகினிப் பிசாசு.''

''பரவாயில்ல. இன்னும் குட்டிச்சாத்தான், சூனியக் கிழவின்னு என்ன வேணா சொல்லுங்க.''

''க்கும்...'' என்ற கனைப்புச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

ராமகிருஷ்ணன்.

வேணுகோபாலன்.

''எக்ஸ்க்யூஸ்மீ... இங்கே லேஸர் டிடெக்டிவ் ஏஜெண்ட்ஸ்...?''

''நாங்கதான்...''

சொன்னவன் கவிதாவைப் பார்த்துப் பல்லைக் கடித்து முணுமுணுத்தான்.

''பாரு. ஸ்கூல் பசங்க மாதிரி உன்கூடச் சண்டை போட்டிட்டிருந்ததைப் பார்த்து அவங்களுக்குச் சந்தேகம் ஆயிடுச்சு. கதவைத் திற.''

''ஒரு அவசர கேஸ் விஷயமா...''

''வாங்க ஸார், உள்ளே வாங்க. நிதானமாக உக்காந்து பேசலாம்.''

இரண்டு பேரையும் ஃபேன் காற்றுக்குக் கீழே உட்கார வைத்தான். தானும்



எதிர்நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். கவிதா குறிப்புப் புத்தகத்தோடு பக்கத்தில் வந்து நின்றாள்.

''சொல்லுங்க.''

''பாலகுரு மெமோரியல் மென்ட்டல் ஹாஸ்பிடல்ல இருந்து வர்றோம்!'' டாக்டர் சொன்னதும் கவிதா அவர்களுக்குத் தெரியாமல் நரேனின் உள்ளங்கையைக் கிள்ளினாள். ''உஷ்... சும்மா இரு!'' என்று சொல்கிற மாதிரி அவள் கையைத் தட்டிவிட்டான் நரேன்.

டாக்டர் தொடர்ந்தார்:

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அங்கிருந்து ஒரு பேஷண்ட் தப்பிச்சுட்டுப் போய்ட்டான்.''

''பேஷண்ட்டா... யு மீன் பைத்தியமா?''

''நீங்க நினைக்கிறமாதிரி மோசமான பைத்தியம் இல்லை. ஒரு விதமான மன வெறியுள்ள ஆசாமி அவன்.''

''பிஹேவியர் எப்படி?''

''என்ன பண்ணுவான்னே சொல்ல முடியாது. சட்டுன்னு கோபம் வரும். கோபம் அளவுக்கு மீறினா எதிராளியோட கழுத்தைப் பிடிப்பான்.''

நரேன் சொன்னான்: ''உடனே நீங்க போலீஸுக்குப் போறது நல்லது...''

''அது தெரியாமலா நாங்க இங்கே வந்திருக்கோம்? இப்படி ஒரு பேஷண்ட் அந்த ஹாஸ்பிடல்ல இருந்து தப்பிச்ச விஷயம் வெளியே தெரியக் கூடாதுன்னுதான் உங்ககிட்டே வந்திருக்கோம்...''

''நாங்க என்ன பண்ணணும்?''

''நீங்க அவனைத் தேடிக் கண்டு பிடிச்சுத் தரணும். அதுவும் எவ்வளவு சீக்கிரமா

முடியுமோ, அவ்வளவு சீக்கிரமா.''

''அந்த பேஷண்ட் பேர் என்ன?''

''ஹரி.''

''மனவெறின்னு சொன்னீங்களே, அது என்னான்னு சொல்ல முடியுமா?''

''காபரே டான்ஸர்ஸைக் கண்டாலே அவனுக்கு அலர்ஜி. காபரேன்னு நீங்க வாயால் சொன்னாலே போதும், உங்க கழுத்தைப் பிடிப்பான்.''

''ரொம்பவும் காபரா பண்றீங்க. ஏன் காபரே மேல அவனுக்கு வெறுப்பு?''

''அவனுக்கு அப்பா, அம்மா கிடையாது. ஒரே ஒரு சிஸ்டர் மட்டும்தான். ரொம்ப கஷ்டப்பட்டு அந்தப் பொண்ணைப் படிக்க வச்சு - ஒரு சம்பந்தத்துக்கும் ஏற்பாடு பண்ணினான். பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளைப் பையன் அந்தப் பொண்ணைப் பார்த்ததுமே, 'நீ க்ரீன் ஸ்டார் ஹோட்டல்ல காபரே டான்ஸர்தானே? ஏய்யா மொதல்லியே சொல்றதுக்கு என்ன?' கெளரவமா காலேஜ்ல படிக்கிற பொண்ணுன்னு சொல்லிக் கூட்டிட்டு வந்துட்டியே!'ன்னு கேட்டுட்டான்.''

''ஆக்சுவலா அந்தப் பொண்ணு காபரே டான்ஸர் இல்லையா?''

''இல்லை... அந்தப் பொண்ணு காபரே டான்ஸர்தான். கூடப் படிக்கற பொண்ணுங்க பணத்தைத் தண்ணி மாதிரி செலவு பண்றதைப் பார்த்துட்டு அதுக்கும் ஆசை. அண்ணனுக்குத் தெரியாம இப்படிச் சம்பாதிக்க ஆரம்பிச்சிருக்கு. ஹரிக்கு விஷயம் தெரிஞ்ச நிமிஷமே ஷாக் ஆயிடுச்சு. மெண்டல் 'டிஸ்ஆர்டர்'ன்னு சொல்லி, கொண்டு வந்து சேர்த்தாங்க.''



''அந்தப் பொண்ணு இப்ப எங்கிருக்கு?''

''சூயிசைட் பண்ணிக்கிச்சு.''

நரேன் திடுக்கிட்டுத் தெளிந்தான்.

''அந்த ஹரியோட அட்ரஸ்?''

''அவன் போட்டோ அட்ரஸ் எல்லாமே இந்த ஃபைல்ல இருக்கு''...

நரேன் அந்த ஃபைலை வாங்கி மெல்லப் புரட்டினான். சில நிமிஷங்கள் கழித்து நிமிர்ந்தான்.

''அந்த ஹரியைப் பிடிச்சாச்சுன்னே வச்சுக்குங்க.''

''விஷயம் வெளியே வரக் கூடாது.''

''கவலைப் படாம போங்க.''

அவர்கள் விடை பெற்றுக் கொண்டு போன பின் -

கவிதா கன்னத்தில் முட்டுக் கொடுத்து நரேனைப் பார்த்துக் கொண்டிருக்க - நரேன் அந்த ஃபைல் முழுவதையும் படித்து முடித்தான்.

''கவிதா... நாம இப்ப என்ன பண்றோம்...''

''அப்பவே நான் சொன்னப்பவே கிளம்பிப் போயிருந்தா இந்நேரம் நிம்மதியா தூங்கிட்டிருக்கலாம்.''

''உன்னை மாதிரி பொறுப்பே இல்லாத ஒருத்தியை நான் எப்படி செலக்ட் பண்ணி வேலைல சேர்த்தேன்னு எனக்கே புரியலை.''

''என்னை செலக்ட் பண்ணின சமயத்துல நீங்களே கூடப் பொறுப்பில்லாமத்தான் இருந்தீங்க. இன்டர்வ்யூ பண்றப்பவே என்னமா என்னை சைட் அடிச்சீங்க. நான் பயந்துட்டேன். இந்த ஆள் கிட்டே நாம கற்போடு காலம் தள்ள முடியுமான்னு...''

போலிக் கோபத்தோடு அவள் தலையில் குட்டினான் நரேன்.

''இதுக்கு மேல ஏதாவது பேசினா உதைப்பேன்.''

''சரி, நாம இப்ப என்ன பண்றோம்?''

''இந்த ஃபைல்ல இருக்கிற ஹரியோட அட்ரஸுக்குப் போய் ஒரு பார்வை பார்த்துட்டு வந்துடுவோமா?''

''மென்ட்டல் ஹாஸ்பிட்டல்ல இருந்து தப்பிச்சுப்போன அவன் நேரா வீட்டுக்குத் தான் போயிருப்பான்னு நினைக்கறீங்களா?''

''நாம எடுக்கற மொதல் ஸ்டெப் இது. ஆள் சிக்கினா ராமகிருஷ்ணன் கிட்டே ஒப்படைச் சுட்டுப் பணத்தை வாங்கிக்கலாம்.''

''இவ்வளவு சுலபமான வேலைக்கு நாம தேவையா? வர்ற வழியில் அந்த ராமகிருஷ்ணனே அவன் வீட்டை எட்டிப் பார்த்துட்டு வந்திருக்கலாம்.''

ஏஜென்ஸி ஆஃபீஸைப் பூட்டினார்கள்.

க்ரவுண்ட் ஃப்ளோருக்கு வந்தார்கள். யமஹாவைக் கதறவிட்டபடி ஹரியின் வீட்டைத் தேடிப் போனார்கள்.

*19,* கோபாலன் தெரு.

பத்தாவது நிமிஷம் கோபாலன் தெருவில் நுழைந்து பத்தொன்பதாம் எண்ணிட்டப்பட்ட வீட்டின் முன்னால் பைக்கின் சகலத்தையும் மவுனப்படுத்திய நிமிஷம், கவிதா உற்சாகமாய் நரேனின் காதை உதடுகளால் உரசினாள்.

''வாங்க நரேன். வீட்டுக்குள்ளே லைட் எரிஞ்சிட்டிருக்கு. ஆள் இருக்கான்.''

## 6

ஹோட்டல் தாரா.

காலை நேரம் 7.15.



ரவி சைக்கிளை ஸ்டாண்ட் இட்டு ஹோட்டலின் பின் பக்கம் நிறுத்தினான். காட்டன் பேண்ட், காட்டன் சர்ட், வாட்ச் இல்லாத கை, இருபத்தைந்து வயது. நடிகர் திலீப்பின் சாயல். சைக்கிள் சாவியைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு - ஹோட்டலின் பின் பக்க வழியில் பிரவேசித்தான். துப்புரவு சூப்ரவைஸராக அந்த ஓட்டலில் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறான்.

எட்டு மணிக்குத் திறக்கப்பட இருக்கிற டைனிங்ஹாலில் - நடக்கிற துப்புரவுப் பணியை மேற்பார்வை பார்த்துவிட்டு டைனிங் ஹாலை விட்டு வெளியே வந்தபோது எதிர்ப்பட்ட சிப்பந்தி, ரவிக்கு குட்மார்னிங் விநியோகித்தான்.

''உங்களைத்தான் ஸார் தேடிட்டு வந்தேன்.''

''என்ன விஷயம்?''

''ரெண்டு தடவை உங்களைக் கேட்டு முதலாளிகிட்டேயிருந்து இண்ட்டர்காம் வந்தது.''

ரவி வியர்த்தான்: ''என்ன விஷயம்?''

''தெரியலை. நீங்க வந்ததும் இண்ட்டர்காம் பேசச் சொன்னார்.''

''சரி. நான் பேசிக்கிறேன்.''

சொல்லிவிட்டு நகர்ந்தான்.

பக்கத்தில் இருந்த மேனேஜரின் அறைக்குள் நுழைந்தான். அவர் இல்லாத மேஜையில் இருந்த இண்டர்காம் ரிஸீவரை எடுத்துக் கொண்டு - பட்டனை அழுத்தினான்.

''ஹலோ...''

''குட்மார்னிங்... ஸார். நான் ரவி

பேசறேன்.''

''எப்போ வந்தே?''

''இப்பதான் ஸார் வந்தேன்.''

''காபரே ஹால்ல இன்னிக்கு ஸ்பெஷல் டெக்கரேஷன்ஸ் பண்ணணும். வழக்கம் போல சாயந்தரம் நாலு மணிக்கு ஹாலைத் திறந்து தூசு தட்டற வேலை வேண்டாம். காலைல இருந்தே டெக்கரேஷன் வேலை ஆரம்பிச்சுடு.''

''வி.ஐ.பி. யாராவது வர்றாங்களா ஸார்?''

''ஆக்டர் சந்திரகாந்த் ஒரு டேபிள் ரிஸர்வ் பண்ணியிருக்கார். அதான்.''

ஆச்சரியப்பட்ட ரவி -

''சரி ஸார். பண்ணிடறேன்.''

சொல்லிவிட்டு ரிஸீவரைச் சாத்தினான்.

நிறைய வி.ஐ.பிக்கள் அந்த ஹோட்டலுக்கு வந்து போயிருக்கிறார்கள். ஒரு நடிகர் - அதுவும் பாப்புலரான நடிகர் வருவது இதுதான் முதல் தடவை.

முன்புறம் இருந்த ரிஸப்ஷனிஸ்ட், மேஜைக்குக் கீழே மாத இதழைச் சுருட்டிப் படித்துக் கொண்டு இருந்தாள். அவன் அருகில் வந்ததும் புத்தகத்தை விட்டுக் கண்கள் கலைய - நிமிர்ந்து பார்த்தாள். புன்னகையை உதட்டில் அமர்த்தி -

''ஹலோ ரவி...'' என்றாள்.

''வந்ததும் வராததுமாக நாவலா? கொடுத்து வச்சவங்க.''

''பார்த்தா அப்படித்தான் தெரியும். இந்த சீட்ல உள்ள கஷ்டம் எனக்குத்தானே தெரியும். உனக்கு என்ன வேணும்?''

''காபரே ஹால் சாவி.''

''காபரே ஹால் சாவிக்கு இந்தக் காலை நேரத்துல என்ன அவசரம்?''



''இன்னிக்கு ஒரு வி.ஐ.பி. வர்றார். டெக்கரேஷன் வேலை இருக்கு.''

''எனக்குத் தெரியாமலா?''

''வி.ஐ.பி. சீட் மட்டும் மேலிடத்தில்தானே புக் பண்றாங்க. நேரமாகுது. சாவியைக் கொடு.''

''யார் அந்த வி.ஐ.பி.?''

''உன் ஒருத்திகிட்டே சொன்னா போதுமே! ஹோட்டல் வாசல்ல பேனர் கட்டி வைக்காத குறையா விஷயத்தைப் பரப்பி விட்ருவே.''

''இல்லை. நான் யார் கிட்டேயும் சொல்லலை.''

''உனக்குப் பிடிச்ச ஆக்டர்ஸ் மூணு பேர் சொல்லு.''

''கமல், ரஜினி சந்திரகாந்த்.''

''டி.வி. நடிகர் சந்திரகாந்தா?''

''ஆமா...''

''அந்த சந்திரகாந்த்தான் வர்றார்.''

''நிஜமாவா?''

''நிஜமாத்தான். சாவியைக் கொடு.''

''ஊ... ஹா... ம்...''

''...ம்...''

''சினி இண்டஸ்ட்ரி பீப்பிள் வர ஆரம்பிசாங்கன்னா ஹோட்டல் ஸ்டாண்டர்ட் உசந்துடும்.''

''அது நம்ம முதலாளிக்கு சந்தோஷம். நீ ஏன் இப்படி குதிக்கறே? இப்ப காபரே ஹால் சாவி தரப்போறியா, இல்லையா?''

சிரித்துக் கொண்டே ஹால் சாவியை நீட்டினாள்.

ரவி, ரிஸப்ஷனை விட்டு விலகி - காபரே ஹாலுக்குள் நுழைந்தான். பூட்டை விடுவித்து அகலமான கதவைத் திறந்தான். கதவுக்கு நேராக இருந்த மேடையின் மேல் பார்வை

தாவியபோது-

தட்டென்று அதிர்ந்து போனான்.

'என்னது அது?'

நெருங்கினான்.

ரத்த மயமாய் - சலனமில்லாத விழிகளால் வெறித்தபடி - ஒரு மோசமான கோலத்தில் கிடந்தாள், காபரே டான்ஸர் தீபிகா.

## 7

அந்த சின்னச் சதுரக் கண்ணாடியைத் தவணை முறையில் அங்கங்கே பிடித்துப் பார்த்து - கட்டியிருந்த சேலையைச் சரி பார்த்துக் கொண்டாள், சுபத்ரா. புதுசாய் இழைத்த செம்புச் சிலை மாதிரி தோற்றம். பர்வதா அண்ட் லிமிடெட்டில் டைப்பிஸ்ட். மின்னல் கீற்று மாதிரி பத்து சென்டிமீட்டர் மல்லிகைப் பூவைத் தினசரி தலைக்குச் செருகிக் கொள்வது அவளுக்குப் பிடித்தமான விஷயம்.

கண்ணாடியைச் சுவர் ஆணியில் மாட்டிவிட்டு - ஹேண்ட் பேக்கில் டிபன் பாக்சைத் திணித்துக் கொண்டு - ஒட்டின மாதிரி இருந்த பக்கவர்ட்டு அறைக்குள் நுழைந்தாள்.

''என்னங்க...''

அவள் குரல் தந்த திசையில் - கட்டிலில் காலை நேரக் குளிருக்கு இதமாகக் கம்பளியைத் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்குகிற தீபக்.

''என்னங்க...'' மறுபடியும் அவள் குரல் கொடுக்க -

தீபக் புரண்டான். ''ம்... ம்...''



ஒரு நீளமான கொட்டாவியோடு சிரமப்பட்டு இமைகளை விரித்தான். தூக்கம் துண்டாகிப் போனதில் செர்ரி மாதிரி சிவந்து போயிருந்த கண்களோடு சுபத்ராவைப் பார்த்தான்.

''என்ன?''

''ரெண்டு தோசை வார்த்து தோசைக்கல்லு மேலேயே மூடி வெச்சிருக்கேன். மத்யானம் சாப்பிட தக்காளி சாதம் எல்லாம் அடுப்புத் திட்டு மேலே வெச்சிருக்கேன்.''

''இதைச் சொல்லத்தான் என்னை எழுப்பினியா?' அவளை எரிச்சலோடு பார்த்தான்.

''நான் வேலைக்குப் போன பிறகு உங்களுக்கு என்ன வேலை? நாள் பூராவும் தூங்கிட்டுதானே இருக்கப் போறீங்க?''

''நான் வேலை இல்லாம இருக்கறதை இப்படி நீ குத்திக்காட்ட வேண்டியதில்லை.''

''நான் சாதாரணமாத்தான் சொன்னேன். உங்களுக்கு ஏன் கோபம் வருது?''

''சம்பாதிக்கற திமிர், உன் கிட்டே ஊறிப் போயிருக்கு.''

''எங்கிட்டே எந்த திமிரும் இல்லை.''

''உன் உடம்புல ரத்தத்துக்குப் பதிலா திமிர்தான் ஓடிட்டிருக்கு.''

''இந்த காம்ப்ளக்ஸும், அநாவசிய கோபமும்தான் நீங்க வேலையில்லாம சும்மா இருக்கக் காரணம். வேலைக்குப் போற பக்கமெல்லாம் மேனேஜர் கூடச் சண்டை போட்டுட்டு ரிசைன் பண்ணிடறீங்க. சில சமயம் சுப்பீரியர் மேல கையையே வெச்சுடறீங்க. சம்பளம் தர்றவங்க நாலு வார்த்தை பேசாமலா இருப்பாங்க?''

''உனக்கு ஆஃபீஸுக்கு நேரமாகலை?''

''நான் வர்றேன்.''

கோபப் பெருமூச்சோடு நகர்ந்தாள். வீட்டில் வெளிப்புறக் கதவை வெறுமனே சாத்திவிட்டுத் தெருவில் இறங்கினாள்.

ஐந்து நிமிஷ நடையில் பஸ் ஸ்டாப்பிங் வந்தது.

சரியான சில்லறையை பேக்கிலிருந்து விடுவித்துக் கையில் வைத்துக் கொண்டு பஸ் ஷெல்டருக்குக் கீழே நின்றாள். விநாடிகள் சில வழிந்து போயிருந்தபோது தட தட வென்ற பைக் சப்தம் காதருகில் மோத - சட்டெனத் திரும்பினாள்.

ஷெல்டருக்குக் கீழே இருந்த தளத்தில் காலை ஊன்றிய நிலையில் தினேஷ் இண்ட் சூசுகியோடு தெரிந்தான். சிகரெட் கறையோடு இருந்த பல் வரிசையைக் காட்டிப் பெரிதாய்ப் புன்னகைத்தான்.

''வாங்க சுபத்ரா, பைக்கிலேயே ஆஃபீஸ் போயிடலாம்.''

''நோ தேங்க்ஸ்.''

சொன்னவள் டவுன் பஸ் வரப்போகிற திசையில் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

தினேஷ் மறுபடியும் புன்னகைத்தான்.

''எப்ப டவுன் பஸ் வந்து எப்ப' நீங்க ஆஃபீஸ் போறது? இப்போ பீக் ஹவர். டவுன் பஸ் வழிஞ்சிட்டுதான் வரும். கசகசன்னு கும்பல் நெரியும். ப்ளீஸ்! பில்லியனில் ஏறுங்க.''

அவன் சொன்னதும் கோபமாய் நிமிர்ந்தாள் சுபத்ரா.

''தினேஷ்! நீங்க உங்க மனசுல என்னதான் நினைச்சிட்டிருக்கீங்க?''

''இந்தச் சின்ன வயசுல வேலை இல்லாத



புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு உழைச்சு உழைச்சு ஓடா தேய்ஞ்சுப் போன உங்களைப் பெருமையா நினைச்சிட்டிருக்கேன்.''

''உங்க பரிதாபம் எனக்கு வேண்டாம்.''

''இந்த சேலையில் நீங்க இன்னிக்கு ரொம்பவும் அம்சமா இருக்கீங்க... புளியேப்பக்காரனுக்குத் தலை வாழையிலை போட்டு விருந்து பரிமாறின மாதிரி... உங்களுக்குப் பிரயோசனமில்லாத புருஷன்.''

உடம்பு பூராவும் விருட்டென்று உஷ்ணம் பரவப் அனல் தகிக்கும் பார்வையோடு நிமிர்ந்தாள்.

''உங்க பேச்சு சரியில்லை. இன்னொரு தரம் இது மாதிரி பேசினீங்கன்னா இது பப்ளிக் ரோடுன்னு கூடப் பார்க்க மாட்டேன். நீங்க என்னோட ஆஃபீஸ் கொலீக்னும் பார்க்க மாட்டேன்...''

அழுத்தம் திருத்தமாய் அவன் முகத்துக்கு நேராகச் சொன்னாள்:

''ஸ்லிப்பரைக் கழட்டிடுவேன்.''

## 8

ஒரு சின்னப் புயல் மாதிரி ஆஃபீஸ் அறைக்குள் கவிதா மூச்சு வாங்க நரேனின் மேஜைக்கு நேராக வந்து நின்றாள். கையிலிருந்த நியூஸ் பேப்பரை அவன் முன்னால் பரப்பினாள்.

''நரேன்! இங்கே பார்த்தீங்களா?''

- நரேன் பார்த்தான்.

காபரே டான்ஸர் கொலை.

உரத்த எழுத்துக்களில் செய்தி.

''நியூஸ் ரிப்போர்ட்டர் காலைல எனக்கு

ஃபோன் பண்ணினார். லேசா ஷாக்தான். நீ என்ன நினைக்கிறே கவிதா?''

''நினைக்கறதுக்கு என்ன இருக்கு? அந்த மென்ட்டல் கேஸ் ஹரியை சீக்கிரமா மடக்கலைன்னா ஊர்ல காபரே டான்சர்ஸ் எண்ணிக்கை கணிசமா குறைஞ்சிடும்ன்னு தோணுது.''

''நேத்திக்கு அவன் வீட்ல லைட் எரிஞ்சிட்டிருந்ததைப் பார்த்ததுமே கேஸ் சால்வ்ட்னு சந்தோஷப்பட்டோம். பட், ஆள் ஆஸ்பத்திரி யூனிபார்மை மாத்திக்கறதுக்காக வீட்டுக்கு வந்திட்டு - சத்தமில்லாம நழுவிப் போயிருக்கான். அவன் பைத்தியம் இல்லை கவிதா...''

''சரி! புத்திசாலிப் பைத்தியம். இப்ப நம்ம பிளான் என்ன?''

''ஹோட்டல் தாரா போறோம்.''

''போய்...?''

''மொதல்ல போவோம்.''

அவர்கள் புறப்பட ஆயத்தமான போது -

டெலிபோன் வாயைத் திறந்தது.

நரேன், ரிசீவரை அள்ளினான். காதுக்குக் கொடுத்தான்.

''ஹலோ, திஸ் ஈஸ் லேஸர் டிடெக்டிவ் ஏஜென்ஸி?''

''யெஸ்!''

''மிஸ்டர் நரேன், நான் ராமகிருஷ்ணன் பேசறேன்.''

''சொல்லுங்க.''

''இன்னிக்கு காலைல பேப்பர் பார்த்தீங்களா?''

''ஹோட்டல் தாரா, காபரே டான்ஸர் கொலை. அந்த நியூசைத்தானே சொல்றீங்க?''

''ஆமா நரேன். அவனை நீங்க சீக்கிரமா பிடிச்சு எங்க கிட்டே ஒப்படைக்கலைன்னா எங்க ஹாஸ்பிடல் பேர் நிச்சயமா கெட்டுடும்.''

''கவலைப் படாதீங்க, கண்டுபிடிச்சுடலாம்.''

''அவனை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?''

''அதுக்குத்தானே ஒரு ஆஃபீஸைப் போட்டு உக்கார்ந்திருக்கோம். நீங்க கவலைப்படாதீங்க ஸார்.''

கவிதா குறுக்கிட்டு -

''நரேன்! அடுத்த கொலை விழறதுக்குள்ளே ஆளைப் பிடிச்சுடுவோம்னு தைரியம் சொல்லுங்க...'' என்று சொல்ல -

அவளை முறைத்துக் கொண்டே ரிசீவரை டொக்கென்று வைத்தான். அறையை விட்டு வெளியேறி காம்ப்ளக்ஸின் முன்புறம் இருந்த ஹாலுக்கு வந்தார்கள்.

பைக்கை உதைத்து உசுப்பி ஹோட்டல் தாராவைத் தொட்டார்கள்.

காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைகிற போதே போலீஸ் வாசனை தெரிந்தது... 'காவல்' என்று எழுதப்பட்ட ஒரு ஜீப்பும் பைக்கும் நின்றிருந்தன.

''நரேன்... பாடி இன்னும் இருக்கும் போலிருக்கு.''

''நோ சான்ஸ். இன்னுமா வெச்சிட்டிருப்பாங்க?''

இரண்டு பேரும் ஹோட்டலுக்குள் நுழைந்த போது இன்ஸ்பெக்டர் பிரகாஷ் எதிர்ப்பட்டார். மொடமொடப்பான யூனிபார்மில் திணிந்திருந்த அவர், குழந்தைகள் பயப்படுகிற மாதிரி மீசை வளர்த்திருந்தார்.

நரேன், கவிதாவைப் பார்த்ததும்,

பரிச்சயமாய்ப் புன்னகைத்தார்.

''ஹலோ.''

''ஹலோ இன்ஸ்பெக்டர்.''

''ரெண்டு பேரும் எங்கே இந்தப் பக்கம்?''

''ஆபீஸ் போயிட்டிருந்தோம். இந்த ஹோட்டல் கார் பார்க்கிங்ல உங்க ஜீப் நின்னுட்டிருந்தது. பார்த்துட்டுப் போகலாமேன்னு வந்தோம்.''

''நம்பச் சொல்றீங்களா என்னை?''

''எதை?''

''எதேச்சையா போலீஸ் ஜீப்பைப் பார்த்துட்டு வர்றேன்னு சொல்றதை. ஏதோ அவசியத்தோடதான் இந்தக் கேஸ்ல மூக்கை நுழைச்சிருக்கீங்க. சரியா?''

நரேன் சிரித்துக் கொண்டே கேட்டான்:

''நோ... இன்ஸ்பெக்டர்... யூ ஆர் ராங். நிஜமாவே போலீஸ் ஜீப்பைப் பார்த்துட்டுதான் உள்ளே வந்தோம். இந்த ஹோட்டல்ல என்ன ப்ராப்ளம்... ஏதாவது ரெய்டா?''

''தீபிகாங்கற காபரே டான்ஸர் கொலை.''

''கேஸ் சுலபமா முடிஞ்சுடுமா? இல்லை, இழுத்தடிச்சிடுமா?''

''ஃபார்மல் என்கொயரீஸ்தான் முடிஞ்சிருக்கு. இனிமேதான் டீப்பா விசாரிக்கணும். ஹோட்டல் எம்.டி. சரவணனைப் பார்க்கத்தான் இப்ப போயிட்டிருக்கேன்.''

''நாங்களும் வரலாமா?''

''வாங்க...! இந்த கேஸுக்கு உதவ முடியுமான்னு பாருங்க.'' அவரோடு நடந்தார்கள்.

லிஃப்டில் ஒரு ஃப்ளோரைத் தொட்டு - வராந்தாவைக் கடந்து - மற்ற அறைக் கதவுகளிடமிருந்து வித்தியாசப்பட்டு கொஞ்சம் பளபளப்போடு இருந்த ஹோட்டல் எம்.டி.சரவணனின் அறைக் கதவைத் தள்ளினார்கள்.

உள்ளே முப்பத்தைந்து வயதிற்குட்பட்ட சரவணன் தெரிந்தான். ஆகாய நீலவர்ண சஃபாரி, உடம்பை மொய்த்திருந்தது. அந்த வயதுக்குத் தேவையில்லாத தொப்பையைச் சேகரம் பண்ணியிருந்தான். உயர்தரமான பெர்ப்யூம் குபீர் குபீர் என்று அவனுடைய உடம்பினின்றும் எழுந்தது.

''டிட் யூ கெட் எனிக்ளூ இன்ஸ்பெக்டர்?''

''நோ... நாட் யெட். உங்க கிட்ட ஒரு என்கொய்ரி.''

''ப்ளீஸ்.''

''தீபிகாவைப் பற்றி என்ன நினைக்கறீங்க?''

''தீபிகா ஒரு நல்ல டான்ஸர். காபரே டான்ஸராயிருந்தாலும் விரசமில்லாமல் பண்ணத் தெரிந்தவள்.''

''மிஸ்டர் சரவணன்! இந்த மர்டர்ல நீங்க யாரையாவது சந்தேகப்படறீங்களா?''

''எனக்கென்னவோ, என்னோட காம்படீடர்ஸ் யாராவது பண்ணின காரியமா இருக்கலாம்ன்னு தோணுது. சமீப காலமா இந்த ஹோட்டலுக்கு வி.ஐ.பீஸ் வர ஆரம்பிச்சிருக்காங்க. இன்னிக்குக் கூட டி.வி. ஆக்டர் சந்திரகாந்த் ஒரு டேபிளை ரிசர்வ் பண்ணியிருந்தார். இதெல்லாம் யாரையாவது உறுத்தியிருக்கலாம்.''

''ஸோ உங்க காம்படீட்டர்ஸ் மேல் நீங்க சந்தேகப்படறீங்க?''

''ஆமா, இன்ஸ்பெக்டர். இதனால் அவங்களுக்கு ரெண்டு விதத்தில் நன்மை.

ஒண்ணு எங்க ஹோட்டல் பேர் கெடும். ரெண்டாவது ஒரு நல்ல டான்ஸரை நாங்க இழந்திருக்கோம். சில கஸ்டமர்ஸ் தீபிகா வோட டான்ஸுக்காகவே வர்றதுண்டு.''

''ஓகே. இது ஒரு கோணம். இது நமக்கு முதல்ல தோணின யூகம். இதை மட்டும் வச்சிகிட்டு கேஸ்ல இறங்கினா சால்வாகாது... தீபிகாவோட இறப்புக்கு வேற யாராவது காரணமாயிருக்க முடியுமான்னு கொஞ்சம் யோசிச்சுப் பார்த்துச் சொல்ல முடியுமா?'' சரவணன், கண்களை உயர்த்தி மேலே சுழல்கிற ஃபேனைப் பார்த்தபடி யோசித்தான்.

அவன் யோசிக்க யோசிக்க - இன்ஸ்பெக்டரே கேட்டார்:

''தீபிகாவுக்கு ரிலேடிவ்ஸ் யாராவது இருக்காங்களா?''

''இல்லை. ஹாஸ்டல்ல இருந்துதான் அவ இங்கே வேலைக்கு வர்றா.''

''ஹோட்டலுக்கு வர்ற கஸ்டமர்ஸ், இங்கே வேலை பார்க்கறவங்க, இவங்கள்ல தீபிகாவோடு நெருக்கமா பழகறவங்க யாராவது இருக்காங்களா?''

''மேனேஜர் சங்கீத், தீபிகாவை லவ் பண்ணிட்டிருந்ததா கேள்விப்பட்டிருக்கேன். அது எந்த அளவுக்கு நிஜம்ன்னு எனக்குத் தெரியாது...''

''அவரைக் கூப்பிடறீங்களா?''

''அவர் இன்னிக்கு லீவ்.''

''எதனால லீவ்?''

''கல்யாண விஷயமா ஒரு வாரம் லீவு வேணும்ன்னு கேட்டிருந்தார். இன்னிலேர்ந்து லீவ்.''

''என்ன மிஸ்டர் சரவணன், சங்கீத்



தீபிகாவை லவ் பண்றதா சொன்னீங்க. இப்ப அவர் மேரேஜ் விஷயமா லீவ் போட்டிருக்கிறதா சொல்றீங்க?''

''நான் எம்பளாயீஸோட பர்சனல் மேட்டர்கள்ல அவ்வளவா அக்கறை எடுத்துக்கறதில்லை. ஒரு வேளை தீபிகாவை அவர் லவ் பண்றது சம்பந்தமா அவர் வீட்ல எதிர்ப்புக் கிளம்பி இருக்கலாம்.''

''அப்படின்னா சமீப நாட்கள்ல தீபிகா, சங்கீத்துக்கு நிச்சயமா ஒரு பிரச்னையாத்தான் இருந்திருப்பாள்.''

''மே... பி...''

## 9

போலீஸ் ஜீப் வந்து வாசலில் நின்றதும் - முன் அறையில் உட்கார்ந்திருந்த அந்த ஐம்பது வயதுக்காரர் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

ஜீப்பிலிருந்து இன்ஸ்பெக்டர் பிரகாஷைத் தொடர்ந்து - நரேனும் கவிதாவும் இறங்கினார்கள். அந்த வீட்டின் வாசற் படி ஏறினார்கள். அவர் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தார்.

''யாரு வேணும்?''

''தாரா ஹோட்டல் மேனேஜர் சங்கீத்தோட வீடுதானே இது?''

''ஆமா.''

''அவரைப் ப்ார்க்கணும்.''

''அவன் வெளியே போயிருக்கானே.''

''நீங்க...?''

''நான் அவனோட ஃபாதர்.''

''அவர் எப்போ திரும்பி வருவார்?''

''இப்ப வந்திடுவான். என்ன விஷயமா நீங்க அவனைப் பார்க்க வந்திருக்கீங்க?''

''அவர் வேலை பார்க்கற ஹோட்டலில், தீபிகாங்கற காபரே டான்ஸர் பொண்ணை யாரோ கொலை பண்ணியிருக்காங்க. அது விஷயமா... அவரை விசாரிக்கணும்.''

பெரியவர் முகம் இருண்டு போயிருந்தார்.

''உங்களுக்கு அந்த தீபிகாவைத் தெரியுமா?''

''இ... இல்லே. இன்ஸ்பெக்டர். எப்பவோ ஒரு தடவை சங்கீத்தைத் தேடிட்டு அந்தப் பொண்ணு வீட்டுக்கு வந்திருக்கிறதா ஞாபகம். மத்தபப்படி அந்தப் பொண்ணைப்பத்தி எனக்குத் தெரியாது.''

''அப்படின்னா உங்க மகன் சங்கீத்துக்கும் அந்தப் பொண்ணுக்கும் நல்ல பழக்கம் இருந்திருக்கணும்.''

''நோ இன்ஸ்பெக்டர். ஒரே ஓட்டல்ல வேலை பார்க்கற பழக்கத்தைத் தவிர அவனுக்கும் அந்தப் பொண்ணுக்கும் வேற எந்தப் பழக்கமும் இருந்திருக்காது. நீங்க சங்கீத்தை விசாரிக்க வேண்டியதே இல்லை. முன் வாசல்ல பந்தல்கால் பார்த்திருப்பீங்களே! சங்கீத்துக்குக் கல்யாணம் நடக்கப் போகுது. பொண்ணு வீட்டுக்காரவங்க அடிக்கடி வந்து போற இந்தச் சமயத்துல அவனை நீங்க விசாரிச்சிட்டிருக்கிறது கொஞ்சம் உறுத்தலா இருக்கும்.''

பிரகாஷ் புன்னகைத்தார்.

''அதை உத்தேசிச்சுதான் ஒரு ஃபார்மல் என்கொயரியோட போயிடலாம்னு நினைச்சுட்டிருந்தோம். ஆனா, நீங்க



பசறதைப் பார்த்தா அப்படிப் போக டியாது போலிருக்கே! உங்களை நிறைய சாரிக்க வேண்டி இருக்கும் போலிருக்கே!''

''இன்ஸ்பெக்டர்... நீங்க என்ன சால்றீங்க?''

''நீங்க ஏதோ விஷயத்தை மறைக்கப் ார்க்கறீங்கன்னு நினைக்கிறேன். உங்க மகன் ங்கீத்துக்கும், அந்த டான்ஸர் தீபிகாவுக்கும் டையே இருந்த பழக்கத்தைப் பத்தி ல்லார்க்கும் தெரிஞ்சிருக்கு. நீங்க அதை றைச்சுப் பேசறீங்க!''

இருட்டைப் பூசிக் கொண்ட முகத்தோடு வர் நிற்க, பிரகாஷ் தொடர்ந்து கேட்டார்:

''இப்ப நீங்க உண்மையைப் பேசறீங்க. ங்க மகன் சங்கீத் தீபிகாவைக் காதலிச்சாரா, ல்லையா?''

அவர் மவுனமாகத் தலையசைத்தார்.

''ஆமா.''

''அதுக்கு நீங்க ஒத்துக்கலை?''

தற்கும் தலையசைத்தார்.

''ஆமா.''

''நீங்க மறுத்ததும் - சங்கீத் உங்களை துவும் எதிர்த்துப் பேசலையா?''

''பேசாமலா இருப்பான்? பேசினான். ந்த தீபிகா பொண்ணையே கல்யாணம் ண்ணிக்கப் போறதா சொன்னான். அவனை ான் உட்கார வெச்சுகிட்டு நிதானமா ஒரு ணி நேரம் பேசினேன். அந்த காபரே ான்ஸரைக் கல்யாணம் பண்ணிக்கப் பாறதினால ப்ராக்டிகல் லைப்ல எவ்வளவு ராப்ளம்ஸ் வரும்னு அவனுக்கு எடுத்துச் சான்னேன். ஆரம்பத்துல அடம் டிச்சவன், அப்புறம் எம்பேச்சுல இருக்கிற ண்மையைப் புரிஞ்சுகிட்டான். அந்தப்

பொண்ணுகிட்டேயும் விஷயத்தை
சொல்லிட்டான்.''

''திடீர்னு சங்கீத் இப்படிச் சொன்னது
தீபிகா சும்மா இருந்திருப்பாளா? சண்டை
போட்டிருப்பா. அந்த விவகாரம் பெரிதாகி
அவளைத் தீர்க்கற வரைக்கும் கொண்டு
விட்டிருக்கும். தீபிகாவோட கொலைக்கு
இந்த மோடிவ்தான் பொருந்தி வருது.''

''நோ இன்ஸ்பெக்டர். சங்கீத்
அப்படிப்பட்டவன் இல்லை. அவன்
பண்ணின ஒரே குற்றம் - அந்தப் பொண்ணை
அவன் காதலிச்சதுதான். ஒரு பெண்ணைக்
கொலை செய்யற அளவுக்கு அவனுக்குத்
தைரியம் கிடையாது.''

''ஒரு காபரே டான்ஸரைக் காதலிச்சவர்,
காதலிச்சதோட நிக்காமே துணிஞ்சு கைவிட
நினைச்சவர், இந்தக் காரியத்தை மட்டும்
செஞ்சிருக்கமாட்டார்ன்னு என்ன நிச்சயம்?''

''அவன் வந்ததும் நீங்களே விசாரிச்சுப்
பாருங்க இன்ஸ்பெக்டர்.''

''எங்கே போயிருக்கார்...?''

''யாரையோ பார்க்கப் போறதா
சொல்லிட்டுப் போனான்.''

''எப்ப வருவார்?''

''தெரியலை, இன்ஸ்பெக்டர்.''

இன்ஸ்பெக்டர் எழுந்தார்.

''சங்கீத் வந்தார்ன்னா ஸ்டேஷன்ல வந்து
என்னைப் பார்க்கச் சொல்லுங்கோ.''

''கட்டாயம் வரச் சொல்றேன்
இன்ஸ்பெக்டர். ஆனா, தயவு செஞ்சு அவன்
மேலே சந்தேகப்படாதீங்க.''

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே
வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.
எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.



ங்கீத்தான்.

ஸ்டாண்ட் இட்டு விட்டு வந்தவன்
ன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் முகம் மாறி
ள்ளே வந்தான். மெல்லிய குரலில்
கட்டான்.

''எஸ்.''

''மிஸ்டர் சங்கீத், நேத்து ராத்திரி உங்க
ஹாட்டல்ல நடந்த சம்பவம் பற்றி
ங்களுக்குத் தெரியுமா?''

''சம்பவமா? என்ன சம்பவம்?''

''உங்க ஹோட்டல் காபரே டான்ஸர்
யாராலோ கொலை
சய்யப்பட்டிருக்காங்க.''

சங்கீத்தின் முகம் அதிர்ச்சியில் விழுந்தது.
மை குட்னஸ்.''

அவனுடைய அதிர்ச்சியை உன்னிப்பாய்க்
வனித்துக் கொண்டே இன்ஸ்பெக்டர்
கேட்டார்.

''கடைசியா நீங்க தீபிகாவை எப்போ
பார்த்தீங்க?''

''அவ காபரே ஹாலுக்குப் போறதுக்கு
முன்னாடி.''

''உங்க கூட ஏதாவது பேசினாளா?''
சங்கீத்தின் அப்பா குறுக்கிட்டார்.

''சங்கீத், இன்ஸ்பெக்டர் என்ன கேள்வி
கேட்டாலும் நீ உண்மையான பதிலைச்
சொல்லிடு. ஏன்னா உம் மேல
சந்தேகப்படறார். உன்னோட காதல்
விவகாரம் உட்பட எல்லா விஷயத்தையும்
நான் இன்ஸ்பெக்டர் கிட்டே மறைக்காம
சொல்லியிருக்கேன்.''

குறுக்கே நுழைந்து அவர் பதில் சொன்னது
சங்கீத்தை பர்ப்பஸாக உஷார்ப் படுத்துவது
மாதிரி இருந்தது.

பிரகாஷ் மறுபடியும் கேட்டார்:

''நேத்து ஈவினிங் தீபிகாவைப் பார்த்தப்
அவ உங்களோடு பேசினாளா?''

''பேசினா...''

''என்ன பேசினா...?''

''என் மேரேஜ் விஷயமாத்தான் பேசின்
பேசினாள்னு சொல்றதை விட சண்டை
போட்டாள்ன்னு சொல்லலாம்.''

''உங்களுக்கு அதனால கோபம்?''

''அவளுக்குத்தான் என் மேல் கோபம்
என்னைக் கண்டபடி திட்டினா. நான் என்
பக்கம் இருக்கிற நியாயத்தை எடுத்து
சொல்லிட்டு - ட்யூட்டி முடிந்ததும் வீட்டுக்கு
வந்துட்டேன்.''

''அப்ப மணி எவ்வளவு இருக்கும்?''

''நான் வீட்டுக்குப் புறப்பட்ட நேரத்தைய
கேக்கறீங்க?''

''ஆமா.''

''பத்து மணி.''

''காபரே எப்ப முடியும்?''

''வழக்கமா பன்னிரண்டு மணிக்கு
முடியும். நேற்றைக்கு ராத்திரி எப்ப
முடிஞ்சதுன்னு எனக்குத் தெரியலை. பை
பை தீபிகா மர்டர் விஷயமா எனக்கு ஒருத்த
மேல சந்தேகமா இருக்கு. இன்ஸ்பெக்டர்.''

''யாரு?''

''காபரேவுக்கு அடிக்கடி வர்ற பணக்காரப்
பையன் ஒருத்தன் தீபிகாவைத் தொந்தரவு
பண்ணிட்டிருப்பான்.''

''தொந்தரவுன்னா...?''

''கற்பு விஷயத்தில் தீபிகா ரொம்பவும்
ஸ்ட்ராங். ஆனா, அவன் அவளைத் தப்பான
வழிக்குக் கூப்பிட்டுகிட்டிருந்தான். நான்
கூடப் பல தடவை அவனை வார்ன்



பண்ணியிருக்கேன்.''

''அவன் எதுக்காக தீபிகாவைக் கொலை பண்ணனும்?''

''பல தடவை தீபிகா அவனை அவமானப்படுத்தியிருக்கா. அதை மனசில் வெச்சிகிட்டு... கொலை பண்ணியிருக்கலாமே!''

''அவன் யார்ன்னு தெரியுமா?''

''திவாகர் ஆட்டோமொபைல்ஸ் ஓனரோட ஸன்தான் அவன்.''

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் எழுந்தார்.

''இப்ப நாங்க வர்றோம். தேவைப்பட்டா மறுபடியும் வர வேண்டியிருக்கும். இந்த கேஸ் முடிவுக்கு வருகிற வரைக்கும் நீங்க வெளியூர் எங்கேயும் போகக் கூடாது...''

''இன்ஸ்பெக்டர்... கல்யாண ஏற்பாடெல்லாம் நான்தான் செய்ய வேண்டியிருக்கு... எப்படி வெளியூர் போகாம இருக்க முடியும்?''

''ஸாரி... அதைப் பத்தி எங்களுக்குக் கவலையில்லை. முக்கியமான சந்தேக லிஸ்ட்ல நீங்க விழறீங்க. வேற வழியில்லை...''

அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள்.

கவிதா, நரேனின் காதில் கிசுகிசுத்தாள்.

''நரேன்! இவர் பின்னால நாம சுத்திட்டிருந்தா உருப்பட மாட்டோம். இவர் சங்கீத்தையும், திவாகர் ஆட்டோமொபைல்ஸ் பையனையும் அலசிட்டிருக்கார். நமக்கு ஹரிதான் முக்கியம்.'' கவிதா சொல்லச் சொல்ல -

நரேனுக்குள் புது யோசனை ஒன்று ஃப்ளாஷ் மாதிரி பளிச்சிட்டது.

# 10

டைப்ரைட்டரின் உறையைப் போர்த்தினாள் சுபத்ரா. அத்தனை நேரம் வரை கைவலிக்க அடித்த மேட்டரை ஒரு தரம் படித்துப் பார்த்து விட்டு அந்தத் தாள்களை மேஜையின் இழுப்பறையில் திணித்துவிட்டுத் திரும்பிய போதுதான் -

ஆபீஸ் மொத்தமும் காலியாகி 'வெறிச்' சென்றிருப்பதை உணர்ந்தாள். மேஜையைப் பூட்டிக் கொண்டு எழுந்தபோது -

கதவருகே ப்யூன் பகதூர் தோன்றினான்.

''என்னம்மா, நீங்க இன்னும் புறப்படலியா?''

''இதோ ஆச்சு பகதூர். ஒரு ஸ்டேட்மெண்ட் அடிக்க வேண்டியிருந்தது. நேரம் போனதே தெரியலை.''

''நேரம் ஆறே முக்கால் ஆச்சும்மா.''

''இதோ கிளம்பிட்டேன்.''

பக்கத்திலிருந்த வாஷ்பேஸினில் முகம் அலம்பிக் கொண்டு அவசர கதியில் கிளம்பி டவுன் பஸ் ஸ்டாப்புக்கு வந்தபோது மேற்கில் சூரியன் சுத்தமாய்ச் செத்திருந்தான்.

தூரத்தில் டவுன் பஸ் முகம் பூத்தபோது, அதை எதிர்கொள்ளத் தயாரானாள். பஸ் - ஸ்டாப்பிங்கைத் தேய்த்துக் கொண்டு நின்றபோது -

''சுபத்ராம்மா...''

குரல் அவசரமாய் அவளைக் கூப்பிட திரும்பிப் பார்த்தாள்.

ப்யூன் பகதூர்.''

''என்ன பகதூர்?''



''உங்க வீட்டுக்காரர் போன் பண்ணினார்ம்மா.''

''அவரா? என்ன சொன்னார்?''

''பாரதி காலனியில் உங்க சொந்தக்காரங்க வீடு இருக்காமே? ஆஃபிஸ் முடிந்ததும் நேரா உங்களை அங்கே வந்துடச் சொன்னார்.''

''அவர் எங்கிருந்து பேசினார்?''

''அந்தக் காலனிலர்ந்துதான் பேசறதா சொன்னார்.''

''சரி பகதூர். ரொம்ப தாங்க்ஸ்.''

யோசித்துக் கொண்டே எதிர்ப் பக்க பஸ் ஸ்டாப்புக்குப் போனாள்.

பாரதி காலனியில் அவளுடைய மாமா வீடு இருக்கிறது.

'எதற்காக அங்கே போனார்?' யோசிப்புடனே பஸ் ஸ்டாப்பில் வந்து நின்ற பாரதி, காலனி போகும் பஸ்ஸில் ஏறினாள். இருபது நிமிஷப் பயணம். ஆள் ஆரவாரமில்லாத பஸ் ஸ்டாப்பில் உதிர்ந்தாள். இரண்டு திசைகளிலும் நீளமாய்ப்படுத்திருந்த சாலைகள் இருட்டில் அமிழ்ந்திருக்க, வெகு தூரங்களில் அங்கங்கே - மின்சார வெளிச்சப் புள்ளிகள் தெரிந்தன.

'பாரதி காலனி' என்று பெயிண்ட் செய்யப்பட்ட போர்டு - சாலையை விட்டுப் பிரிந்து போகிற மண் பாதையைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தது.

நடக்க ஆரம்பித்தாள் சுபத்ரா.

'மாமா வீட்டுக்கு எதற்காக வந்திருப்பார்?'

யோசித்துக் கொண்டே அந்த மண் பாதையில் நடந்து ஒரு வளைவில் திரும்பிய போது எதிரே உயரமாய் ஒரு உருவம் நின்றிருந்தது.

அந்த மசமச இருட்டில் நெஞ்சு பூராவும் திக்கென்று அதிர்ந்து போய்ச் சட்டென ஒதுங்கி நடந்தாள். உருவம் அவளை மறைக்கிற மாதிரி வந்து நின்றது.

நிமிர்ந்து பார்த்தாள்.

முகம் தெரியவில்லை.

சுபத்ரா வியர்த்துப் போய் -

பதட்டத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருட்டும் நிசப்தமும்தான் மண்டியிருந்தது.

இருதயத் துடிப்பு எகிறிக் கொள்ள மீண்டும் அந்த உருவத்திடம் இருந்து விலகி மேலே நடக்க யத்தனித்தவளின் கையை எதிர்பாராத விநாடியில் பிடித்தது அந்த உருவம்.

''யா... யார் நீ...?''

உதறியவளுக்குத் திக்கென்றிருந்தது. உருவத்தின் பிடி எஃகுத்தனமாய் இருந்தது.

'கிறீச்'சென்று அலற வாயெடுத்தாள். அடுத்த விநாடி ரிவிட் அடித்த மாதிரி உருவத்தின் இன்னொரு கை, அவள் வாயைக் 'கப்'பென்று பொத்தியது. நிறையத் திமிறினாள். அவளை அசைய விடாமல் உருவத்தின் பிடி பயங்கரமாக இறுகிக் கொண்டது.

## 11

இன்ஸ்பெக்டர் பிரகாஷிடம் இருந்து பிய்த்துக் கொண்ட நரேனும், கவிதாவும் யமஹாவில் தாவிப் பீறிட்டார்கள். நரேன், பைக்கைப் பறக்கடிக்கிற வேகத்துக்குக் கவிதாவின் மூச்சு திணறியது.



''நரேன்! புது யோசனை ஒண்ணு க்ளிக் ஆனதா சொன்னீங்களே! என்ன அது?''

''பேசாம வா! நீயே தெரிஞ்சுப்பே.''

''நீங்க போற வேகத்தைப் பார்த்தா - அது என்னன்னு தெரிஞ்சுக்காமலே மேலோகம் போய்ச் சேர்ந்துடுவேனோன்னு சந்தேகமா இருக்கு.''

''என் ரைடிங் மேல அவ்வளவு நம்பிக்கையா கவிதா?'' சொல்லிக் கொண்டே 'சக்'கென்று பிரேக் இட்டான் நரேன், யமஹா நின்றிருந்த இடம், பாலகுரு நினைவு மனநோய் மருத்துவ மனையின் போர்டிகோ.

''நரேன்! இங்கே எதுக்காக?''

''வா... சொல்றேன்.''

பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள். ரிசப்ஷன் கவுண்ட்டர் அருகே நின்றிருந்த நர்சிடம் நரேன், ''எக்ஸ்க்யூஸ்மீ...'' என்றான்.

முதுகைக் காட்டியபடி நின்றிருந்த நர்ஸ் ரீட்டா திரும்பினாள்.

''எஸ்.''

''டாக்டரைப் பார்க்கணும்.''

''நீங்க யாரு?''

''நரேன்னு சொல்லுங்க.''

அவள், அங்கே இருந்த இருக்கைகளைக் காட்டினாள்.

''உக்காருங்க. ரவுண்ட்ஸ் போயிருக்கார். இப்ப வந்துடுவார்.''

சொல்லிவிட்டு மீண்டும் அவள் இரண்டு பேருக்கும் முதுகைக் காட்டியபடி திரும்பிக் கொண்டாள். மருத்துவ நலம் கருதும் போர்ட்ரெய்ட்கள், சுவர்களில் அங்கங்கே அப்பிக் கிடக்க - அவைகளைப் பார்வையில்

வாங்கியபடி சில நிமிஷங்களை விரயம் பண்ணினார்கள். இருபது நிமிஷத்திற்குப் பிறகு டாக்டர் வேணுகோபாலன் வந்தார். இரண்டு பேரையும் பார்த்துப் புன்னகை ஒன்றை உதட்டிலிருந்து இறக்கி வைத்தார். தன் அறைக்குக் கூட்டிக் கொண்டு போய் உட்காரவைத்துக் கொண்டு கேட்டார். பக்கத்திலே நர்ஸ் ரீட்டா.

''என்ன நரேன், ஹரியைப் பத்தி ஏதாவது தெரிஞ்சதா? ஹோட்டல் தாரா காபரே டான்ஸர் கொலைக்கும் ஹரிக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?''

''போலீஸ் இன்வெஸ்டிகேஷனைப் பார்க்கும்போது இதுவரை ஹரி அந்த கேஸ்ல தலை காட்டலை. அவங்க ஆங்கிளே வேற. அதுல ஹரி விழச் சாத்தியமேயில்லை. ஹரி தப்பிச்சுப்போனது நமக்கு மட்டுமே தெரிஞ்ச ரகசியம்.''

''அவனை எப்படியும் பிடிச்சாகணும் நரேன்.''

''ஹரியைத் தேடிக் கண்டுபிடிக்கறது சுலபமான வேலைதான் டாக்டர். ஆனா, போலீசுக்குத் தெரியாம தேடிக் கண்டு பிடிக்கணும்ங்கறதுதான் கஷ்டம். பகிரங்கமா அவனைத் தேடறதுக்கு எத்தனையோ வழி இருக்கு. டி.வி.யில், பேப்பரில் - போட்டோ போட்டு ஜனங்களுக்கு எச்சரிக்கை தரலாம். போலீஸும் ஸ்டெப்ஸ் எடுப்பாங்க.''

''நோ... நோ... போலீஸ் இதுல சம்பந்தப்படவே கூடாது.''

''ஓகே! பை த..பை ஒரு முக்கியமான தகவலைக் கேக்க மறந்துட்டேன் டாக்டர். அதைத் தெரிஞ்சுட்டுப் போகத்தான் வந்திருக்கோம்.''

''என்ன தகவல்?''

''ஹரியை இங்கே கொண்டு வந்து அட்மிட் பண்ணினது யாரு?''

''அவனோட ஸிஸ்டர்தான்.''

''ஹரியைப் பார்க்க நெருக்கமான ஃப்ரெண்ட்ஸ் அல்லது ரிலேடிவ்ஸ் வந்தாங்களா?''

''நான் உங்களுக்குக் கொடுத்த ஃபைலைப் படிச்சுப் பார்த்தீங்களா?''

''பார்த்துட்டேன். நான் கேக்கற இந்த விபரம் அதில் இல்லை.''

''ஹரியை அட்மிட் பண்ணறப்ப அவன் ஸிஸ்டரைத் தவிர இன்னொரு ஃப்ரெண்டும் கூட இருந்த மாதிரி ஞாபகம்.''

''அந்த ஃப்ரண்டைப் பத்தி யாருக்காவது இங்கே தெரிஞ்சிருக்க வாயிப்பிருக்கா டாக்டர்?''

நரேன் கேட்ட நிமிஷம் நர்ஸ் ரீட்டா திரும்பினாள்.

''டாக்டர்... அந்த ஃப்ரெண்ட் கவுண்ட்டரில் பணம் கட்டின மாதிரி எனக்கு ஞாபகம்.''

''யாரந்த ஃப்ரெண்ட்?''

''தெரியலை.''

''அந்த பேஷண்ட் அட்மிட் ஆன தேதி நமக்குத் தெரியும் இல்லையா?'' நரேன் கேட்டான்.

''தெரியும். அதனால என்ன பிரயோஜனம்? ஹரி சம்பந்தப்பட்ட அப்ளிகேஷன்ஸ் எல்லாத்திலும் அவனோட ஸிஸ்டரோட கையெழுத்துதான் வாங்கி வெச்சிருக்கோம். கூட வந்த அந்த ஃப்ரெண்டைப் பத்தி நமக்குத் தெரிய சான்ஸ் எதுவும் இல்லையே.''

''ஒருவேளை கூடவந்த ஃப்ரெண்ட் ரிஸப்ஷன்ல பணம் கட்டியிருந்தார்ன்னா அங்கே அவரோட பேர், விலாசம் கிடைக்க வாய்ப்பிருக்கில்லையா?''

''நல்ல யோசனை. ஆனா, நாம எதிர் பார்க்கிற தகவல் அந்த ரெசிப்ட்லே கிடைக்குமான்னு தெரியலை.''

''முயற்சி பண்ணிப் பார்க்கலாம். ஏன்னா ஹரி இங்கிருந்து தப்பிச்ச வுடனே தன்னோட வீட்டுக்குப் போயிருக்கான். அதே மாதிரி அந்த ஃப்ரெண்ட் வீட்டுக்கும் போயிருந்தா...? அங்கேயிருந்து நமக்கு உபயோகமான தகவல்கள் ஏதாவது கிடைக்கலாம்.''

அடுத்த நிமிடமே ரிஸப்ஷனிஸ்ட் அழைக்கப்பட்டு, பழைய பீரோவிலிருந்த பழைய ரசீது புக்குகள் தூசு தட்டப்பட்டு - மும்முரமாக அந்தக் குறிப்பிடப்பட்ட தினத்தின் குறிப்பிட்ட ரசீதைத் தேடினார்கள். ஏறக்குறைய இருபது நிமிஷங்களுக்குப் பின் - அந்த ரசீது சிக்கியது.

நரேன் ரசீதில் பார்வையை ஓட விட - கவிதா தோளுக்குப் பின்னால் எட்டிப் பார்த்தாள். ரசீதின் ஓரத்தில் போடப்பட்டிருந்த கையெழுத்து யாருக்குமே புரியாத கிறுக்கலாய் இருந்தது. அட்ரஸ் என்ற எழுத்துக்களுக்கு நேராக எழுதப்பட்டிருந்த முகவரிகளைப் பார்த்தார்கள். ''வீ... காட் .. இட்.''

28, கலீல் ரோடு,
மந்தைவெளி,
சென்னை.

அந்த அட்ரஸைக் குறித்துக் கொண்டு எழுந்தார்கள்.



''தாங்க்யூ டாக்டர். நாங்க வர்றோம்.'' ண்டும் யமஹா.

**28,** கலீல் ரோடுக்குரிய பங்களா பள ளப்பாய் இருந்தது. கேட் அருகே பைக்கை றுத்திவிட்டு - உள்ளே போனார்கள்.

க்ரில் கதவு சாத்தப்பட்டிருக்க -

சுவரில் பொதிந்திருந்த காலிங் பெல் விட்சை ஆட்காட்டி விரலில் தொட்டான் ரேன். வீட்டுக்குள் சப்தம் சிதறின. சில நாடிகளுக்குப் பின் -

ஒரு பெண் நடந்து வருவது க்ரில் டைவெளிகளிடையே தெரிந்தது.

''யாரு வேணும்?'' கதவைத் திறக்காமலே கட்டாள்.

நரேன் - பொதுவாக,

''ஸார் இல்லையா?'' என்றான்.

''ஹோட்டலில்தான் இருப்பார்.''

லேசான திகைப்போடு நரேன் - அந்தப் பெண்ணை ஏறிட்டான்.

''ஹோட்டலா? எந்த ஹோட்டல்?''

''நீங்க எங்க வீட்டுக்காரரைத்தானே கேக்கறீங்க?''

''வீடு மாறி வந்துட்டோமோன்னு ந்தேகமா இருக்கு. உங்க வீட்டுக்காரர் என்ன ண்ணிட்டிருக்கார்?''

''ஹோட்டல் தாரா இன்டர்நேஷனல் வரோடதுதான்.''

''அவர் பேரு சரவணனா?''

''ஆமா...''

நரேன் தோளை அழுத்தினாள் கவிதா. ஸாரி' சொல்லி விட்டு வெளியே வந்தார்கள்.

''நரேன், ஹரி எப்படி நீபிகா கேஸ்ல ழையறான்னு மண்டையை உடைச்சிட்டி

ருந்தோமே... அந்த ஹோட்டல் எம்.டி சரவணன் - ஹரிக்கு ஃப்ரெண்ட். ஹரி காபே டான்ஸர்ஸ் மேல தனக்கு இருக்கற வெறியை முதல் முதல்ல தன்னோட ஃப்ரெண்ட் ஹோட்டலைச் சேர்ந்த டான்ஸர் கிட்டே மே க்காட்டியிருக்கான். என்ன சொல்றீங்க?''.

''உன் யூகம் சரிதான்.''

## 12

திவாகர் ஆட்டோமொபைல்ஸ்.

அந்த இளைஞனை அரைமணி நேரத்துக்கும் மேல் விசாரித்து முடித்தபின் - இன்ஸ்பெக்டர் பிரகாஷ் ஜீப் ஏறினார். ஜீப் வரை கூடவே வந்தான் அவன்.

''ஸோ, அந்த ராத்திரி உங்க அக்கா பொண்ணோட கல்யாண ஃபங்க்ஷன்ல இருந்ததா சொல்றீங்க?''

''ஆமா இன்ஸ்பெக்டர், ஏதோ ரெண்டு தரம் அந்த தீபிகாவைச் சீண்டின பாவத்துக்கு என்கிட்டே என்கொயரிக்கு வந்துட்டீங்களே.''

''இன்வெஸ்டிகேஷன்னு வந்துட்டா எல்லாரையுமே விசாரிக்க வேண்டியது எங்க ட்யூட்டி. நீங்க அந்த கல்யாண ஃபங்க்ஷன்ல இருந்ததுக்கு ரெண்டு சாட்சிகளோட சாயந்தரம் ஸ்டேஷன் வந்து கையெழுத்துப் போட்டுட்டுப் போயிடுங்க.''

அவன் தலையாட்டினான்.

ஜீப்பை ஸ்டார்ட் செய்து நகர்த்தினார் பிரகாஷ்.

ஸ்டேஷனை அடைந்த போது -

ரிஸீவரும் கையுமாய் இருந்த



கான்ஸ்டபிள், ''ஸார்... உங்களுக்குத்தான் போன்'' என்றார்.

ரிஸீவரைக் கான்ஸ்டபிளிடம் இருந்து பெற்றுக் கொண்ட பிரகாஷ், உதடுகளை அசைத்தார். மறு பக்கமிருந்து வந்த தகவலைக் கேட்கக் கேட்க - முகம் மாறினார்.

ரிஸீவரை வைத்தவுடன் அவசரமாய் கான்ஸ்டபிள்களைத் திரட்டிக் கொண்டு ஜீப்புக்கு ஓடினார்.

ஜீப்பில் ஏறிக் கொண்ட எஸ்.ஐ. கேட்டார்: ''எனி திங் இம்பார்ட்டண்ட் ஸார்?''

''மர்டர்...''

''எங்கே?''

''பாரதி காலனியில்...''

ஜீப் புறநகரைக் கடந்து பாரதி காலனியைத் தொட்டது. மண் பாதையில் புழுதியைக் கிளப்பி அந்தப் பாதி கட்டப்பட்ட செங்கல் கட்டிடத்தின் முன்பாக நின்றது. ஜனக்கும்பல், கட்டிடம் அருகே கொத்துக் கொத்தாய் நின்றிருந்தது. இன்ஸ்பெக்டர் பிரகாஷ், ஜீப்பை விட்டு இறங்கியபோது அந்த நடுத்தர வயதுக்காரர் பிரகாஷை நெருங்கினார்.

''நான்தான் இன்ஸ்பெக்டர், உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்.''

''உங்க பேரு?''

''ஜெயராம்.''

''பாடி எங்கே?''

கட்டிடத்தின் உள்ளே அழைத்துப் போனார் அந்த ஜெயராம். கரடு முரடான கருங்கல் தரையில் ஒருக்களித்து விழுந்து கிடந்தாள் சுபத்ரா. கண்களும் நாக்கும் லேசாகப் பிதுக்கம் காட்ட கொஞ்சம் கோரமாகச் செத்திருந்தாள்.

''பாடியை யாரு மொதல்ல பார்த்தது?''

''தெரியலை இன்ஸ்பெக்டர். இங்கே ஒரே கூட்டமாயிருந்தது. வாக்கிங் வந்த நாவ எட்டிப் பார்த்தேன்... உடனே உங்களுக்கு போன் பண்ணினேன்.''

''இந்தப் பொண்ணை ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமா?''

''இது என் சொந்தக்காரப் பொண்ணு ஸார்... அநேகமா என் வீட்டுக்குத்தான் வந்திருக்கணும்...''

''உங்க வீடு எங்கிருக்கு?''

''இன்னும் ஒரு ஃபர்லாங் தள்ளி இருக்கு இவ மட்டும் தனியா இங்கே எதுக்காக வந்தாள்ன்னு புரியலை.''

''கழுத்துல தாலி இருக்கு?''

''இந்தப் பொண்ணோட புருஷன் தீபக் எனக்குச் சொந்தம். மாசம் ஒரு தடவை ரெண்டு பேரும் இங்கே வந்துட்டுப் போவாங்க.''

''இந்தப் பொண்ணு பேரு?''

''சுபத்ரா.''

''சுபத்ரா ஹஸ்பெண்டுக்குத் தகவல் போயிருக்கா?''

''சொல்லி விட்டிருக்கேன் ஸார்...''

ஜெயராம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தீபக் ஆட்டோவினின்றும் இறங்கி - கும்பலை விலக்கிக் கொண்டு வேக வேகமாய் உள்ளே வந்தான்.

''இவன் தான் ஸார் தீபக். சுபத்ராவோட புருஷன்!'' என்றார், ஜெயராம்.

அவன் அலறல் படபடப்பெல்லாம் தணிந்து ஆசுவாசமாகிற வரை காத்திருந்த பின் அவனிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தார் பிரகாஷ்.

''மிஸ்டர் தீபக், நீங்க ... பண்ணிட்டிருக்கீங்க?''

''இப்போ, நான் சும்மாதான் இருக்கேன் ஸார்...''

''இதுக்கு முன்னாடி...?''

''சரோ டூல்ஸ்ங்கற கம்பெனில வேலை பார்த்துட்டிருந்தேன். மேனேஜருக்கும் எனக்கும் ஆகலை. கடுதாசியை நீட்டிட்டு வந்துட்டேன்.''

''நேத்திக்கு உங்க ஒய்ஃப் சுபத்ரா மட்டும் எதுக்காக இங்கே வந்தாங்க?''

''தெரியலை, இன்ஸ்பெக்டர் ஸார்.''

''இங்கே வர்றதா உங்ககிட்டே சொல்லலையா?''

''ம்ஹூம்.''

''மிஸஸ் எங்கே வேலை பார்க்கறாங்க?''

''பர்வதா அண்ட் கோ-வில் டைப்பிஸ்ட்டா இருக்கா.''

அவன் சொல்லச் சொல்ல எதேச்சையாய் பிரகாஷின் பார்வை கீழே கிடந்த சுபத்ராவின் டெட்பாடியின் கழுத்துப் பகுதியருகே போக -

ஒரு சின்ன ஆச்சர்யம் அவர் முகத்தை ஆக்கிரமித்தது.

## 13

''நரேன்! டைப் அடிச்சது சரியா?'' கொத்தாய்க் கையிலிருந்த தாள்களை அள்ளி - நரேனின் முகத்துக்கு நேராக நீட்டினாள் கவிதா. 'ஹரி' என்ற தலைப்பில் அதுவரை அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் எழுத்துக்களாய் உருவெடுத்திருந்தன.

படித்துப் பார்த்துவிட்டு -

''ஃபைல்ல போட்ரு!'' என்றான் நரேன்.

''நெக்ஸ்ட்?''

''சரவணனைக் கொஞ்சம் விசாரிக்கணும்.''

''புறப்படலாமா?'' கவிதா எழுந்த அதே விநாடி டெலிபோன் கூப்பிட்டது.

நரேன் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ... நரேன் ஹியர்...''

''நான் இன்ஸ்பெக்டர் பிரகாஷ், குட்மார்னிங்.''

''குட்மார்னிங் ஸார்... என்ன விஷயம்?''

''காபரே டான்ஸர் தீபிகா கேஸ்ல நீங்க கேர் எடுத்திருந்தீங்களா?''

''ஏன் ஸார்?''

''அக்கறை வெச்சிருந்தீங்கன்னா சொல்றேன்.''

''வெச்சிருக்கேன்.''

''அப்போ நீங்க நேரோ ஜி.எச்.க்கு வாங்க.''

''இப்பவே வரணுமா ஸார்?''

''இந்த நிமிஷமே.''

நரேனும், கவிதாவும் யமஹாவில் ஜர்னித்து ஜி.எச்.சைத் தொட்டார்கள்.

பிரகாஷ், வராண்டாவில் தட்டுப்பட்டார்.

''தீபிகாவைக் கொலை பண்ணின அதே மர்டரர் இன்னொரு கொலையையும் பண்ணியிருக்கான்.''

அவர் சொன்னதும் நரேனும் கவிதாவும் அதிர்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''விக்டிம் ஆணா, பொண்ணா ஸார்?''

''பொண்ணு.''

''இதுவும் காபரே டான்ஸர்தானா?''

''இல்லை. இது ஒரு [illegible] பொண்ணு...''

மறுபடியும் நரேனும், கவிதாவும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள்.

நரேன் கேட்டான்:

''தீபிகாவைக் கொலை பண்ணினவன்தான் இந்தப் பெண்ணையும் கொன்ல பண்ணியிருக்கான்னு நீங்க எதை வச்சு சொல்றீங்க, இன்ஸ்பெக்டர்?''

''வாங்க, சொல்றேன்.''

பக்கத்தில் இருந்த மார்ச்சுவரிக்குள் கூட்டிப் போனார் பிரகாஷ். போஸ்ட் மார்ட்டம் முடிக்கப்பட்டு சதை மூட்டை மாதிரி கிடந்த சுபத்ரா தகர மேஜை மேல் கிடத்தப்பட்டிருந்தாள்.

பாடியை நெருங்கினார்கள்.

''மோட் ஆப் மர்டர்.''

''தீபிகாவைக் கொன்ன மாதிரியே கையாலேயே நெரிச்சுக் கொலை பண்ணியிருக்கான்.''

''அதை மட்டும் வெச்சு ரெண்டு கொலையையும் செஞ்சது ஒருத்தன்தான்னு எப்படித் தீர்மானிக்க முடியும் ஸார்?''

''அதை மட்டும் வெச்சு நான் அந்த முடிவுக்கு வரலை. இதோ பார்த்தீங்களா?''

அவர் சுபத்ராவின் கழுத்துப் பகுதியில் ஒரு இடத்தைத் தொட்டுக் காட்டினார். அந்த இடத்தில் ஆழமாக ஒரு காயப் பதிவு.

''இதே காயத்தைத் தீபிகாவோட கழுத்தி லும் பார்த்தோம். ஞாபகம் இருக்கா?''

''ஆமா. இதே காயம் தீபிகாவோட கழுத்திலும் இருந்தது.''

''இந்தக் காயம் எப்படி ஏற்பட்டிருக்கும்?''

மூன்று பேரும் காயத்தை உற்றுப்

பார்த்தார்கள்.

கவிதா சொன்னாள்:

''நரேன், இப்ப நீங்க ஒரு கையாலே என் சகல திமிறலையும் தடுக்கறீங்க. இன்னொரு கையாலே கழுத்தை நெரிக்கறீங்க. அப்ப உங்க கை பொஸிஷன் எப்படி இருக்கும்?''

''வேண்டாம்மா, எனக்கு இருக்கிறது நீ ஒரேயொரு செக்ரெட்ரி''

''ப்ச்! ஒரு பேச்சுக்குச் சொல்றேன்.''

நரேன் அவளைத் தன் அருகே இழுத்து - கழுத்தில் கையைச் சுழற்றிப் போட்டுக் காண்பித்தான்.

''வலது கையில நீங்க ஒரு ப்ரேஸ்லெட், அல்லது மெட்டல். ரிங் போட்டிருந்தா அதனோட அழுத்தம் கழுத்துல இந்த மாதிரி காயம் ஏற்ப சான்ஸ் இருக்கு...''

''யூ... ஆர் கரெக்ட் கவிதா...''

''ஸோ ரெண்டு கொலையும் ஒரே மாதிரி நடந்திருக்கு.''

''ஒரு காபரே டான்ஸர், ஒரு குடும்பப் பொண்ணு! மோட்டிவ் என்ன?''

''பாரதி காலனிக்குச் சுபத்ரா அந்த நேரத்துக்குப் போகக் காரணம்?''

''இன்னும் தெரியலை... வழக்கம் போல ஆஃபீஸ் முடிஞ்சதும் வீட்டுக்குப் போகாம ரிலேடிவ்ஸ் இருக்கற அந்தக் காலனிக்குப் போயிருக்கா.''

''சுபத்ரா வேலை பார்க்கற கம்பெனியில விசாரணை நடத்தினீங்களா?''

''பார்மாலிடீஸ் ஒவ்வொண்ணா முடிஞ்சிட்டிருக்கு. அடுத்தது ஆஃபீஸ் ஸ்டாப்ஃகளை என்கொயரி பண்ண வேண்டியது தான்! அங்கதான் கிளம்பறேன். வர்றீங்களா?''



''கண்டிப்பா...''

புறப்பட்டார்கள்.

பர்வதா அன்ட் கம்பெனியின் மேனேஜரின் அனுமதியோடு ஸ்டாஃப்களைத் தனித்தனியாக விசாரித்தார்கள்.

எல்லோருமே தாங்கள் வீட்டுக்குக் கிளம்புகிறவரை சுபத்ரா ஆஃபிஸில் டைப் அடித்துக் கொண்டு இருந்ததாகச் சொல்ல -

''சுபத்ரா கிளம்புகிறவரை இங்கே இருந்தது யாரு?'' பிரகாஷ் கேட்டார்.

''பகதூர்.'' ப்யூன் பகதூர் அழைத்து வரப்பட்டான்.

''சுபத்ரா போறவரை நீதான் இருந்தியா?''

''ஆமா ஸார். நான்தான் ஆஃபீஸைப் பூட்டணும்.''

''நேத்திக்கு யாராவது சுபத்ராவைப் பார்க்க வந்திருந்தாங்களா?''

''யாரும் வரலை ஸார். ஆனா, அவங்க ஆஃபீசை விட்டு போனதும் ஒரு ஃபோன் வந்தது.''

''யார் கிட்டே இருந்து?''

''சுபத்ராம்மாவோட புருஷன் கிட்டேயிருந்து.''

''போன்ல அவர் என்ன சொன்னார்?''

''பாரதி காலனியில் உறவுக்காரங்க வீடு இருக்கறதாகவும் சுபத்ராவை அங்கேயே வந்துடும்படியாகவும் சொன்னார்.''

''சுபத்ரா ஆஃபிஸ் முடிஞ்சி போய்ட்டதா சொல்றே, நியூசை எப்படி அவங்ககிட்டே சொன்னே?''

''எதிர்ல இருக்கிற பஸ் ஸ்டாப்லதான் நின்னுட்டிருந்தாங்க. உடனே போய் விஷயத்தைச் சொல்லிட்டேன். அவங்க பாரதி காலனி போற பஸ்ல ஏறிப்

''நரேன்! இந்த ஸ்டேட்மெண்ட் கொஞ்சம் உதைக்கலை?''

''இன்ஸ்பெக்டர்! சுபத்ரா வெளியே போறதை வாட்ச் பண்ணின மூணாவது நபர், ஒருத்தர் ஃபோன் பண்ணி 'நான் சுபத்ராவோட ஹஸ்பெண்ட் பேசறேன்'னு சொல்லி விஷயத்தை கன்வே பண்ணியிருக்கணும்.''

''நீபக்போன்பண்ணலைன்னு சொல்றீங்களா?''

''பண்ணியிருந்தா அவர்தான் உங்ககிட்டே சொல்லியிருப்பாரே?''

''எக்ஸ்க்யூஸ்மி, இன்ஸ்பெக்டர்...''

ஒரு குரல் குறுக்கிட, பிரகாஷும் நரேனும் திரும்பினார்கள். அவன் நின்றிருந்தான்.

''ஐ'ம் தினேஷ். இந்த ஆஃபிஸ்லதான் வேலை பார்க்கறேன். சுபத்ராகிட்டே எனக்குக் கொஞ்சம் அதிகமாவே பழக்கம் உண்டு. அவ வெறும் குடும்பத்துப் பொண்ணா மட்டும் இருந்திருந்தா இப்படி ஒரு துர்மரணம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.''

''நீங்க என்ன சொல்றீங்க?''

''நான் இப்ப சொல்லப் போற தகவல் சுபத்ராவோட கணவனுக்குக்கூட இதுவரை தெரியாதுன்னுதான் நினைக்கிறேன். ஒரு குறிப்பிட்ட ஹோட்டலிலிருந்து அழைப்பு வந்தா சுபத்ரா காபரே டான்ஸ் ஆடப் போவா! எஸ். ஷி ஈஸ் எ காபரே டான்ஸர்.''

நரேன் - கவிதா அதிர்ந்து போனார்கள்.

## 14

**ஹா**ஸ்பிடல் டெலிபோனில் ரிங்போய் - யாரோ எடுத்தார்கள். நரேன் ரிஸீவரில்



குரலைத் தேய்த்தான்...

''ஹலோ... பாலகுரு ஹாஸ்பிடல்?''

''எஸ்.''

''டாக்டர் வேணுகோபாலன் இருக்காரா?''

''ஹோல்டிங்.''

''டாக்டர்! நான் நரேன். ஒரு சின்னச் சந்தேகம்?''

''கேளுங்க...''

''அந்த பேஷண்ட் ஹரி கையில மெட்டல் ரிங் மாதிரி ஏதாவது போட்டிருந்தானா?''

''ஒரு நிமிஷம்!''

டெலிபோனில் சில விநாடிகளுக்குக் குழப்ப சப்தம். எதிரே மோவாய்க்குக் கை கொடுத்து உட்கார்ந்திருந்த கவிதா, பொறுமை இல்லாமல் -

''என்னவாம்?'' என்றாள்.

''பொறேன்!''

பதில் சொன்ன நரேன் - லைன் உயிர் பெற்றதும் ரிஸீவரில் உன்னிப்பானான்.

''மிஸ்டர் நரேன்!''

''சொல்லுங்க... டாக்டர்...''

''அந்த ஹரி இங்கே அட்மிட் ஆக வந்தப்ப கையில ப்ரேஸ்லெட் ஏதோ போட்டிருந்தானாம். இங்கே அட்மிட் ஆன பிறகு அதைக் கழற்றி வெச்சுட்டாங்க.''

''ஸோ அவனுக்கு ப்ரேஸ்லெட் போட்ற பழக்கம் இருக்கு!''

''எஸ். எதுக்குக் கேக்கறீங்க...?''

''ஹரி இன்னொரு கொலைக்கும் பூஜை போட்டுட்டான்.''

''என்ன சொல்றீங்க?''

நரேன், சுபத்ராவைப் பற்றிச் சொன்னான். டாக்டர் கவலை ஆனார்.

''எதையாவது செஞ்சு சீக்கிரமா அவனைப்

படிங்க. நரேன்... விஷயம் விஸ்வரூபம் எடுக்கறதுக்கு முன்னாடி அவனை மடக்க முடியாதா?''

''முயற்சி பண்றோம்.''

''அந்த ஹோட்டல் எம்.டி.சரவணன் கிட்டே ஹரியைப் பத்தி விசாரணை பண்ணினீங்களா!''

''இனிமேத்தான் போகணும்.'' ரிஸீவரை வைத்தான்.

''டாக்டர் என்ன சொல்றார் நரேன்?''

''ஹரி பிரேஸ்லெட் போடுவானாம்.''

''அப்போ ரெண்டு கொலைகளுக்கும் காரணம் ஹரிதான்.''

''இந்த ஹரியை எங்கேன்னு போய்த் தேடறது? டாக்டர் வேற ரொம்பவும் அவசரப்படறார்.''

''சரவணன் மூலமா ஹரியோட மத்த ஃப்ரென்ட்ஸை டப்பா விசாரிக்கணும். யாராவது ஃப்ரெண்ட் வீட்லதான் அவன் அடைக்கலம் புகுந்திருக்கணும். சரவணனைக் கொஞ்சம் விசாரிச்சா விபரம் தெரியலாம்.''

யமஹாவில் பயணித்து ஹோட்டல் தாராவுக்கு வந்தார்கள்.

சுழல் இருக்கையில் சிகரட் புகையோடு உட்கார்ந்திருந்த சரவணன், இரண்டு பேரையும் வரவேற்றான். ''உட்காருங்க நரேன்.'' உட்கார்ந்தார்கள்.

''மிஸ்டர் சரவணன்! சில விபரங்கள் கேட்டுட்டுப் போகலாம்ன்னு வந்தோம்.''

''அபௌட் தீபிகா?''

''நோ, நோ. அபௌட் ஹரி.''

''ஹரியா?''

''எஸ்! உங்க ஃப்ரெண்ட் ஹரியைப் பத்தி



ஒரு விசாரணை. பாலகுரு ஹாஸ்பிடல்ல நீங்கதானே ஹரியை அட்மிட் பண்ணினீங்க?''

''ஆமா. நானும் ஹரியோட சிஸ்டரும்தான் அட்மிட் பண்ணினோம். அவனுக்கு ஒரு விதமான மனோ வியாதி இருந்தது. அவனைப் பத்தி இப்ப எதுக்காகக் கேக்கறீங்க?''

''ஹரிக்கு திக் ஃப்ரெண்ட் யாரு?''

''நான் கூட அவனுக்கு திக் ஃப்ரெண்ட்தான்.''

''உங்களைத் தவிர...?''

''என்னைத் தவிர... குமார்ன்னு ஒருத்தன்.''

''அந்தக் குமாரோட வீடு எங்கிருக்கு?''

கன்னத்தைப் புறங்கையால் தேய்த்தபடி யோசித்த சரவணன் -

''அடையார்ல...'' என்றான்.

''அட்ரஸ்?''

''ஒரு நிமிஷம்! வந்துடறேன்!'' என்ற சரவணன், எழுந்து பக்கத்து அறைக்குள் நுழைய -

கவிதா, நரேன் காதில் என்னவோ கிசுகிசுத்தாள்.

நரேன் ஆச்சர்யமாய் அவளைப் பார்த்தான்.

''இஸிட்?''

''ஆமா நரேன்.''

''அப்படின்னா 'அதை'ப் பிரகாஷ்கிட்டே தான் கேக்கணும்.''

''நாம இப்ப பிரகாஷைப் பார்ப்போம்! அதான் முக்கியம்.''

''உனக்கும் மூளையிருக்கு. நீ சொன்ன க்ளூ மட்டும் உதவியா இருந்தா, அடுத்த மாசம் உனக்கு இன்க்ரிமெண்ட்.''

''கிழிச்சீங்க...''

சரவணன் உள்ளே இருந்து வந்தான். கையில் ஒரு துண்டுக் காகிதம். ''இந்தாங்க குமார் அட்ரஸ்! பை... த... பை ஹரியைப் பத்தி எதுக்காக நீங்க விசாரிக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஸாரி! அதை வெளியே சொல்றதுக்கில்லை.''

சரவணனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு யமஹாவில் வேகமாய்ப் பாய்ந்தார்கள். போலீஸ் ஸ்டேஷன் வாசலில் பைக்கை வீசியெறியாத குறையாய் ஸ்டாண்ட் இட்டு விட்டு உள்ளே போனார்கள்.

பிரகாஷின் எதிரே உட்கார்ந்த பின் நரேன் பேச்சை ஆரம்பித்தான்.

''இன்ஸ்பெக்டர்! கிட்டத்தட்ட உங்களுக்கு தீபிகா கேஸூம் சால்வ் ஆன மாதிரித்தான்.''

பிரகாஷ் ஆச்சரிய முகத்தோடு பார்த்தார்.

''என்ன சொல்றீங்க?''

''நாங்க அதைச் சொல்றதுக்கு முன்னாடி ஒரு விஷயத்தை நீங்க எங்களுக்குத் தெளிவு படுத்தணும்.''

''என்ன விஷயம்?''

சொல்ல ஆரம்பித்த நரேனின் பார்வை லாக்கப்பிற்குப் போனபோது அவனுக்குள் அதிர்ச்சி, திடும்மென்று எகிறிக்கொண்டது.

## 15

தோளில் டம்பப் பை வழிய - கார்டன் சில்க் புடவையில் செழிப்பாய்ச் சிக்கியிருந்தாள் ப்ரதிபா. பார்க்கிற



ஆண்களுக்கு அவஸ்தையை உண்டாக்கும் லோகட் ஜாக்கெட்டும், தொப்புள் தெரிகிற சேலைக் கட்டும் அவளுடைய ஸ்பெஷல் அயிட்டங்கள். மதர்த்த மார்புகளை மேலும் உயர்த்தியிருந்தாள்.

''என்ன வேணும்?'' என்றான், சரவணன் அவளைப் பார்த்து.

''ஸார்! இந்த ஹோட்டலுக்கு காபரே டான்ஸர் வேண்டி இருக்கறதா கேள்விப்பட்டேன். நான் நல்லா ஃபர்பாமென்ஸ் தருவேன் ஸார்.''

''உம் பேர் என்ன?''

''ப்ரதிபா.''

''உன் வீடு எங்கே?''

''கோபி நகர்ல.''

''இதுக்கு முன்னாடி எந்த ஹோட்டலில் காபரே பண்ணிட்டிருந்தே?''

''ஹோட்டல் ஸ்கை ப்ளு.''

''ராத்திரி பன்னிரண்டு மணி வரைக்கெல்லாம் ஹோட்டல்ல இருக்க வேண்டியிருக்கும்.''

''இருப்பேன் ஸார்.''

''இப்போதைக்கு காபரே டான்ஸை நிறுத்தி வெச்சிருக்கோம். ஒரு மாசம் கழிச்சு ஆரம்பிப்போம். அப்போ உனக்குத் தகவல் தர்றேன். அட்ரஸ் குடுத்துட்டுப்போ.''

மேஜை மேலிருந்த ஸ்க்ரப்ளிங் பேடை நகர்த்தி வைத்தான் சரவணன்.

ராத்திரி 8.00 மணி.

'தட்... தட்... தட்.'

கதவு தட்டப்படுகிற சத்தம், காதை வருட ப்ரதிபா வந்து கதவைத் திறந்தாள்.

வெளியே

ஒரு பொடியன் நின்றிருந்தான்.

''என்னடா?''

''வேலைக்குச் சொல்லியிருந்தீங்களாம். ஒரு அங்கிள் இந்த அட்ரஸுக்கு உங்களை இப்பவே வரச் சொன்னார்.''

அவன் ஒரு துண்டுக் காகிதத்தை நீட்டினான். ப்ரதிபா அதை வாங்கிப் பார்த்தாள். அந்த அட்ரஸுக்குரிய பஸ் நம்பர் முதற்கொண்டு குறிக்கப்பட்டுத் தெளிவாக டைப் செய்யப்பட்டிருந்தது.

''யாரு இதைக் கொடுத்தது?'' கேட்டபடியே நிமிர்ந்தவள் ஆச்சர்யப்பட்டாள்.

அந்தப் பொடியன் காணாமல் போயிருந்தான்.

''உங்களை இப்பவே வரச் சொன்னார்!'' அவன் சொன்ன வாக்கியம் மட்டும் காதில் இருந்தது.

நேரம் பார்த்தாள்.

8.00

அவசர அவசரமாய் வேறு புடவைக்கு மாறினாள்.

வெளியே வந்தாள். வீட்டைப் பூட்டினாள்.

இருபது நிமிஷ டவுன் பஸ் பயணம்.

நிசப்தத்தைத் தழுவியிருந்த அந்தப் பகுதியில் இறங்கினாள். அட்ரஸை மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து நடந்தாள்.

இருட்டான அந்த ரோட்டில் நூறு மீட்டர் தூரம் நடந்திருப்பாள்.

த்தட்டென்று சாலையோரப் புதர் மறைவிலிருந்து ஒரு கை நீண்டது.

'குபுக்' கென்று ப்ரதிபாவை இழுத்தது.

தடுமாறிப் புதருக்குள் வந்து விழுந்த ப்ரதிபா அங்கிருந்த உருவத்தைப்



பார்த்ததும் - அதிர்ந்தாள்.

சரவணன்!

''ஸார்... நீ... ங்... களா...?''

''நானேதான்.''

''இ... இ...ங்கே? எதுக்காக...'' குழறினாள், ப்ரதிபா.

அவன் பதில் பேசாமல் பற்களைக் கடித்துக் கொண்டே கழுத்தை நெரிக்க ஆரம்பித்தான்.

அவள் விழி பிதுங்க ஆரம்பித்த விநாடி - ரோட்டின் அடுத்த பக்கத்திலிருந்து நான் கைந்து டார்ச் லைட்டுகள் ஒளியைத் துப்பின.

''சரவணன்! அந்தப் பொண்ணை விடுங்க.'' இன்ஸ்பெக்டர் பிரகாஷ் ரிவால்வரோடு வெளிப்பட்டார்.

அவர்க்கு இரண்டு பக்கத்திலும்

நரேன்

கவிதா

## 16

போலீஸ் ஸ்டேஷன்.

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் நரேன், கவிதாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ''இந்த ஹரியைப் போன வாரமே சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் பக்கத்துல சந்தேகத்துக்கு இடமளிக்கிற வகையில் திரிஞ்சிட்டிருந்த தனால ஜீப்பிலே அள்ளிப் போட்டுகிட்டு ஸ்டேஷனுக்கு வந்துட்டோம். விசாரிச்சுப் பார்த்தோம். அவன் எந்தப் பதிலும் சொல்லலை. அடி உதையை வாங்கிட்டு சும்மாவே இருந்தான். இவனை என்ன பண்றதுன்னு தெரியாமே நாங்க முழிச்சிட்டிருந்தோம். நீங்க என்னடான்னா

இந்த ஹரிதான் காபரே டான்ஸர்ஸைக் கொலை பண்ணியிருப்பான்ங்கிற எண்ணத்துல தேடிட்டிருந்திருக்கீங்க... ஒரு விஷயத்தை மறைக்கப் போய் எவ்வளவு அலைச்சல் பார்த்தீங்களா, நரேன்?''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்...''

''நீங்க வேற கோணத்துல கேஸை நோக்கிப் போயிருந்தாலும் கொலையாளியை அற்புதமா ட்ரேஸ் பண்ணியிருக்கீங்க. டிபார்ட்மெண்ட் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கு.''

''இந்த கேஸ் வெளிச்சத்துக்கு வந்ததுக்கு காரணமே கவிதாவோட க்ளூதான், இன்ஸ்பெக்டர். கொலையான ரெண்டு பெண்களோட கழுத்திலும் மெட்டல் ரிங் காயம் இருந்தது. ஸோ கொலையளியோட கையில் மெட்டல் ரிங் அல்லது பிரேஸ்லெட் மாதிரி ஏதாவது இருக்கணும்ங்கிற முடிவுக்கு வந்தோம். சரவணனை முதல் தடவையா நீங்களும் நானும் கவிதாவும் விசாரணை பண்ணப் போகும் போது அவரோட கையில் ஒரு மெட்டல் ரிங்கைப் பார்த்திருக்கா கவிதா. நேற்றைக்கு, நாங்க ரெண்டாவது தடவை ஹரியைப் பத்தி சரவணன் கிட்டே விசாரிக்கப் போகும் போது சரவணன் கையில் அந்த மெட்டல் ரிங் இல்லாததையும் கவனிச்சிருக்கா. சரவணன், ஹரியோட ப்ரெண்ட் குமாரோட அட்ரஸை எடுத்துட்டு வர்றதுக்காக உள்ளே போனபோது - கவிதா இந்த மாற்றத்தைப் பற்றி என் கிட்டே சொன்னா. நாங்களும் உடனே உங்க கிட்ட வந்து கேட்டோம். நீங்களும் சரவணன் அடிக்கடி போன் பண்ணி தீபிகாவோட கேஸை விசாரிக்கிறதாகவும் கொலையாளி கையில் மெட்டல் ரிங் இருக்கலாம்ங்கிற



க்ளுவை சரவணன் கிட்டே சொல்லிட்டதாகவும் தகவல் கொடுத்தீங்க... உங்க க்ளுவை கேட்டதும் சரவணன் உடனே தன் கையிலிருந்த மெட்டல் ரிங்கைக் கழட்டி வெச்சிருந்தார்... அதைக் கவிதா உன்னிப்பா கவனிச்சிருக்கா.''

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். ''பரவாயில்லை நரேன்! உங்க செக்ரட்ரி உங்களைக் காட்டிலும் புத்திசாலியா இருக்காங்க...''

''இந்தக் . கால் வாரல்தானே வேண்டாம்ங்கிறது, இன்ஸ்பெக்டர்? அவ கொடுத்தது ஒரு சின்ன க்ளுதான். ஆனா, நான் செட் பண்ணி ப்ரதிபாவா நடிக்கச் சொன்ன பொண்ணு சரவணனுக்கு என்னமா வலை விரிச்சா. அந்த வலையைப் பின்னியது நான்தான். அந்த நாடக நடிகைக்கு நாலு நாள் கால்ஷீட் கூலி எவ்வளவு தெரியுமா இன்ஸ்பெக்டர்? ஐந்நூறு ரூபாய். அந்த ரூபாயையும் உங்க டிபார்ட்மெண்ட் தான் கொடுக்கணும்.''

''குடுத்துடலாம்...''

கவிதா குறுக்கிட்டாள்: ''இன்ஸ்பெக்டர்...''

''எஸ்.''

''சரவணன் எதுக்காக காபரே டான்ஸர்ஸைக் கொலை பண்ணினாராம்...? வாட் வாஸ் த மோட்டீவ்?''

''அவர் சொல்ற காரணம் விசித்திரமாயிருக்கும். தீபிகாவை அன்னிக்கு ராத்திரி படுக்கைக்குக் கூப்பிட்டாராம் சரவணன்... அவள் மறுக்கவே இவர் ஃபோர்ஸ் பண்ணியிருக்கார். அந்தப் போராட்டத்தில் தீபிகா செத்துட்டா... போலீஸ் வந்து விசாரணையை ஆரம்பிச்சதும் - ஆள் பயந்திருக்கார். கேஸ் தீபிகாவையே சுத்திச் சுத்தி வந்தா - தான் சீக்கிரமே

போலீஸ்ல மாட்டிக்குவோம்னு நினைச்சு - கேஸைத் திசை திருப்பி விடறதுக்காகவும் - வேற யாரோ இந்த கொலைகளைப் பண்ணிட்டிருக்காங்கற எண்ணத்தைப போலீஸுக்கு உண்டாக்கவும் சில காபரே டான்ஸர்களைத் தீர்த்துக் கட்ட நினைச்சிருக்கார்... அதனோட விளைவுதான் ரெண்டாவது பலி சுபத்ரா. மூணாவது வேட்டைக்கு முயற்சி பண்ணும் போதுதான் நாம மடக்கிட்டோம். மர்டர் டெர்மினலைக் கண்டுபுடிச்சுட்டோம்.''

நரேனும் கவிதாவும் எழுந்தார்கள்.

''நாங்க புறப்படறோம் இன்ஸ்பெக்டர்...''

''என்ன அதுக்குள்ளே புறப்பட்டுட்டீங்க?''

''தலைக்கு மேல் ஏகப்பட்ட கேஸ் இருக்கு. இன்ஸ்பெக்டர்... போய் ஒவ்வொண்ணா கவனிக்கணும்.''

கவிதா குறுக்கிட்டாள்:

''பொய் இன்ஸ்பெக்டர். தலைக்கு மேலே ஒரு கேஸுமில்லை. இனிமேதான் கேஸுக்காக ஆளைப் பிடிக்கணும். அவர் இப்போ சாரதா பவன்ல தயிர்வடையும் காப்பியும் சாப்பிடற நேரம். அதான் கிளம்பிட்டார்...''

''பாவி! படுபாவி!'' என்று நரேன் அவளுடைய தலையில் குட்ட -

இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

முற்றும்.

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலன்களைப் பெறுகிறான்.''

எனக்குத் தெரிந்த வங்கி அதிகாரி ஒருவர். அவர் பெயர் அறிவுராஜன். இப்போது பாரத ஸ்டேட் வங்கியில் மேலாளராகப் பணிபுரிகிறார். ஒரு கிராமத்தில் வசதி குறைந்த குடும்பத்தில் பிறந்த அவர், தன்னுடைய கிராமத்தில் இருந்து 16 கிலோ மீட்டர் தள்ளி ஒரு கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்துப் பள்ளிக்கு சைக்கிளில் படிக்கப் போவாராம். அப்படி சைக்கிளில் போகும் போது வழியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியையும் அதனுள் பணிபுரியும் மேலாளரையும் பார்த்துக் கொண்டே போவாராம். அப்போது அவருடைய மனதில் ஓர் எண்ணம் வருமாம். ''நானும் என்றைக்காவது ஒரு நாள் இந்த வங்கிக்கு மேலாளராய் வருவேன். கழுத்தில் டையைக் கட்டிக் கொண்டு கம்பீரமாய் அந்த நாற்காலியில் அமர்வேன்'' என்று எண்ணிக் கொண்டே தன்னுடைய பதினைந்தாவது வயதில் அந்த பேங்க்கை கடந்து போவாராம். அந்த நினைப்பின் பயன் இன்றைக்கு அவர் தன்னுடைய 35-வது வயதில் ஒரு பாரத ஸ்டேட் வங்கிக்கு மேலாளர். இது எப்படி சாத்தியம்...? எல்லாமே எண்ணத்தின் வலிமைதான்.

நாமும் நல்லதையே நினைப்போம்!

நன்மைகள் பெறுவோம்.

இனி இந்த மாதம் க்ரைம் நாவல் ஸ்பெஷலில் இடம் பெற்றுள்ள நாவல்களைப் படியுங்கள். உங்களுடைய கருத்துக்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த க்ரைம் நாவல் ஸ்பெஷலில் வழக்கம் போல் இரண்டு நாவல்கள் அதிரடியாய் உங்களை மிரள வைக்கும். காத்திருங்கள்.

மீண்டும் அடுத்த ஃபேக்ஸில் சத்திப்போம்.

மிக்க அன்புடன்,

வணக்கம்.

ராஜேஷ்குமார்.